ஆகஸ்ட் 2024

TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

தீபம் 13 சுடர் 03

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## அன்பு + தியாகம் = உண்மையான விடுதலை

அன்னையின் விண்ணேற்பு மற்றும்

**சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்**

# தீபகத்திலிருந்து இறையாசீர்



ஆகஸ்டு மாதம் என்றாலே நம் நினைவுக்கு வருவது, ஒன்று: அன்னையின் விண்ணேற்பு பெருவிழா, இரண்டு: நமது தாய் நாட்டின் சுதந்திர தினவிழா. அன்னையின் விண்ணேற்பும் இந்திய நாட்டின் விடுதலையும் ஒரு பொதுவான செய்தியை நமக்கு தருகின்றது. நமது "விடுதலை" மற்றும் "சுதந்திரம்" என்பதே அந்த பொதுவான கொண்டாட்டம்.

விண்ணேற்பு பெருவிழா என்பது மரியன்னை கடவுளின் தாய், தன்னுடைய இவ்வுலக வாழ்நாட்களை முடித்து தன் ஆன்மாவோடும், உடலோடும், விண்ணக மாட்சியுடன் எடுத்துச் செல்லப்பட்டார் என்ற மறையுண்மையை திருஅவை வெகு சிறப்பாக கொண்டாடுகின்றது. இந்த மறையுண்மையின் நிகழ்வு இவ்வுலகில் யார் யாரெல்லாம் கடவுளின் திருவுளப்படி நடந்து ஒரு புனிதமான வாழ்வை வாழ்ந்து வருகிறார்களோ அவர்கள் விலைமதிப்பு பெறாத விடுதலையையும், சுதந்திரமாகவும், கடவுளின் விருப்பப்படி பெரும் ஆசீர்வாதங்களை வெகுமதியாக பெற்றுக்கொள்வார்கள். அதேப்போன்று நமது தாய் நாடு இந்தியாவில் யார் ஒருவர் மனித நேயத்தோடு வாழ்ந்து மனிதமாண்பை மதித்து, எல்லோரிடமும் சகோதர சகோதரிகளாய் பழகி, சுதந்திரத்துடன் வாழ்ந்து பிறரின் சமூக அரசியல் விடுதலைக்கு பாடுபட்டு தியாகம் செய்து வாழ்கிறார்களோ அவர்கள் அனைவரும் இந்நாளில் எல்லோராலும் நினைவுக் கூர்ந்து கொண்டாடப்படுவார்கள்.

இவ்விரு விழாக்களும் ஒரே ஆன்மீகத் தாக்கத்தை நமக்கு ஏற்படுத்த வேண்டும். இவ்விழாக்கள் நமக்கு தீயவர்களிடமிருந்து விடுதலையையும், பாவத்திலிருந்து மன்னிப்பையும், அடிமைத்தளையிலிருந்து சுதந்திரத்தையும் பெற வேண்டுமானால் நாம் வாழும் இவ்வுலகில் விடுதலைப்பெற்ற மக்களாக வாழ்ந்து, கடவுளின் அன்பை பகிர்ந்து, எல்லோரோடும் இன்பமுடனும், சுதந்திரமுடனும், வாழ வேண்டும்.

உண்மையான விடுதலை என்பது, நாம் மரியன்னையைப்போல் தூய்மையான வாழ்வு வாழ்ந்து, பாவத்தை ஒழித்து, எந்த தீமைக்கும் அடிமையாகாமல் வாழ்ந்தால் நாம் இவ்வுலகில் உண்மையான விடுதலைப்பெற்றவர்களாய், நேர்மையாளர்களாய், தீயோரை வென்றவர்களாய், பாவத்தை ஒழித்தவர்களாய், சாவை வென்றவர்களாய், வாழ்வோம். இவ்விரு பெருவிழாக்களும் நம்மை உலகிற்கு ஒளியாய், உப்பாய், புளிப்பு மாவாய், உண்மையிலும், நேர்மையிலும், அன்பிலும், மனிதாபிமானத்திலும், தியானத்திலும், மகிழ்ச்சியிலும், சகோதரத்துவத்திலும் வாழ்ந்து புனிதமான வாழ்க்கை வாழ இவ்விழாக்கள் நம்மை அழைக்கின்றது.

உண்மையான விடுதலை என்பது கடவுளை அன்பு செய்து வாழ்வது, கடவுளை அன்பு செய்வது என்பது தம் சகோதர சகோதரிகளை அன்பு செய்து வாழ்வது, கண்ணால் காணும் இந்த சகோதர சகோதரிகளை அன்பு செய்யாது, நாம் கண்ணால் காணாத கடவுளை எப்படி அன்பு செய்ய முடியும்? எனவே அன்பு செய்யாத அடிமைகள், உண்மையான விடுதலையும், சுதந்திரத்தையும் பெற முடியாது. பிறரை அன்பு செய்து வாழ்வோர் விடுதலைப் பெற்றவர்களாவர். உண்மையான அன்பு தன் உயிரையும் தந்து, பிறர் வாழ தியாகம் செய்யும் என்பதே உண்மை.

இந்த உண்மையான விடுதலையை நம் வாழ்வில் பெற வேண்டுமானால் நாமும் மற்றவர்களிடம் உண்மையான அன்புடனும், தியாகத்துடனும் வாழ்ந்தாலே நாம் இயேசுவின் உண்மையான பிள்ளைகளாய் வாழ்வோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு அவரில் இணைந்து செபித்து வாழ்வோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.08.2024 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி - திருப்பலி 02
04.08.2024 பொதுக்காலம் 18ம் ஞாயிறு - திருப்பலி 03
05.08.2024 புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு- திருப்பலி 04
06.08.2024 ஆண்டவரின் தோற்ற மாற்றம் பெருவிழா - திருப்பலி 06
11.08.2024 பொதுக்காலம் 19ம் ஞாயிறு - திருப்பலி 07
14.08.2024 புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே - திருப்பலி 08
15.08.2024 புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா - திருப்பலி 10
18.08.2024 பொதுக்காலம் 20ம் ஞாயிறு - திருப்பலி 11
24.08.2024 புனித பர்த்தலமேயு விழா - திருப்பலி 12
25.08.2024 பொதுக்காலம் 21ம் ஞாயிறு - திருப்பலி 13
26.08.2024 அருளாளர் செப்ரீனோ நமுங்க்குரா - திருப்பலி 15
28.08.2024 புனித அகுஸ்தின் - திருப்பலி 16
29.08.2024 புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் - திருப்பலி 17

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கன்னி மரியா ஓர் அரசி 19
புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே - வாழ்வு தரும் பாடம் 21
அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி மற்றும்
அருளாளர் செப்ரீனா நமுங்க்குரா வாழ்வை அறிவோம் 24
திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 02.08.2024 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, சலேசிய ஆன்மீகம் என்பது நற்செய்தியின்படி வாழ்வதாகும். அரச குடும்பத்தில் பிறந்தவராயினும் இறைவனுடைய குரலை அழைத்தலை ஏற்றுக்கொண்டு, ஆடம்பர வாழ்க்கையைத் துறந்த அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி (சலேசிய குருவானவர்) அவர்களின் விழாவை இன்று கொண்டாடுகிறோம். தனது 20ம் வயதில் உலகப் பற்றுகளை வெறுத்து துறவியாக வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தபோது புனித தொன் போஸ்கோவின் சந்திப்பு இவரைக் கவர்ந்ததால் சலேசிய சபையில் சேர்ந்தார். இறைவனின் குரலுக்கு செவிமடுப்பது என்பது எளிதான காரியமல்ல. அதனை வாழ்வாக்க முற்படுகிறபோது, நாம் பல்வேறு விதமான எதிர்ப்புக்களையும், சோதனைகளையும் சந்திக்க நேரிடும். அருளாளர் அகஸ்துஸை எப்படியாவது சபையில் இருந்து வெளியே கொண்டுவர வேண்டும் என்பதற்காக இவரது குடும்பத்தினர் தொல்லைகள் பல கொடுத்த போதும் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார். நுரையீரல் பாதிப்பினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது, இறைவன்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பின் காரணமாக அனைத்தையும் தாங்கிக்கொண்டு சலேசிய குருவானார். தனது வேதனையிலும் சாந்தமுடன், இறைவனோடு ஒன்றித்து, இறையன்பில் ஆழமாக வாழ்ந்து புனிதத்தின் உயர்ந்த நிலையை அடைந்தது சிறப்புக்குரியது.

அன்பர்களே, சில வேளைகளில் ஒருவருக்குத் தம் சொந்த வீட்டில்கூட மதிப்பு இருப்பதில்லை. பெற்றோரும், உடன் பிறந்தோரும் ஒருவரின் கனவுகளை, ஆர்வங்களை, ஆற்றல்களைப் புரிந்துக் கொள்ளாமல் ஏளனம் செய்வதையும், ஊக்கப்படுத்தாமல், குறைகூறி சோர்வடையச் செய்வதையும் பார்த்திருக்கிறோம். ஒருவேளை நமக்கேகூட அப்படி நடந்திருக்கலாம். இறைமகன் இயேசுவின் வாழ்விலும் இந்த அனுபவம் நிகழ்ந்திருக்கிறது என்பது நமக்கு வியப்பைத் தருகிறது, ஆறுதலும் தருகிறது. இன்றைய வாசகம் இதனை மாற்றியமைக்க அறைகூவல் விடுக்கிறது. நமது வீட்டில் நம்மோடு வாழும் சொந்தங்களைப் பற்றிச் சிறிது சிந்தித்து, முதலில் அவர்களை ஏற்கவும், மதிக்கவும், பாதுகாப்பு அளிக்கவும் கற்றுக்கொள்வோம். Charity begins at home என்ற வாக்கிற்கேற்ப நம் சொந்த இல்லத்தில் உள்ளோரை அன்பு செய்யவும், மதிக்கவும் இன்று உறுதி ஏற்போம். துன்பங்கள் எழுந்து நம்மை அழுத்துகின்ற வேளைகளில் நம்மை கைதூக்கி விடுபவர் நம் இறைவன் என உணர்ந்து அவரது குரலுக்கு செவிமடுத்து வாழ வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் நாயகனே இறைவா, உம்மை போற்றுகிறோம். எங்கள் தீய வழிகளை விட்டு, மனம் திரும்ப நீர் தரும் அழைப்புக்காகவும், வாய்ப்புக்காகவும் நன்றி கூறி அவற்றைப் பயன்படுத்தி எங்கள் வாழ்வின் வழிகளை மாற்றிக்கொள்ளும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தந்தையின் விருப்பப்படி வாழ்ந்த இயேசுவே, உம் சொந்த ஊரினர், உறவினர் உம்மை ஏற்றுக் கொள்ள மறுத்த நிகழ்வு எங்கள் கண்களைத் திறப்பதாக. எங்களது சொந்தங்கள், உறவுகளை நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ளவும், மதிக்கவும், அன்பு செய்யவும், ஊக்கமளிக்கவும் எங்களுக்கு அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 04.08.2024 பொதுக்காலம் 18ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. வி.ப. 16: 2-4, 12-15 II. எபே. 4: 17, 20-24 யோவா. 6: 24-35

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, பொதுக்காலத்தின் 18ம் ஞாயிறு திருப்பலி உங்கள் அனைவரையும் திருஅவை அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தின் வழியாக இறைச்சிக்காக இறைவாக்கினர்களுக்கு எதிராக முணுமுணுத்த இஸ்ரயேல் மக்களின் முறையீடுகளை ஆண்டவர் கேட்டார். மன்னா பொழிந்து அவர்களின் பசிபோக்கினார் என்று அறிகிறோம். இன்றும் நம் ஆன்ம பசியை நற்கருணை வழியாக போக்கி வருகிறார். ஆகவே நமது முணுமுணுப்புகளும் ஆண்டவர் காதுகளுக்கு கேட்காமலில்லை. அவர் நம் தேவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு இறைவார்த்தைகளைக் கேட்போம். இரண்டாம் வாசகத்தின் வழியாக நம்முடைய பழைய நடத்தையை மாற்றி நம் மனப்பாங்கினை புதுப்பித்து கடவுளின் சாயலுக்குரிய புதிய மனித இயல்பை அணிந்துக்கொள்ள அழைப்புவிடக்கும் புனித பவுலின் வார்த்தைகள் குறித்து சிந்திப்போம்.

இன்றைய நற்செய்தியிலும் நாம் நம்முடைய நடத்தையை மாற்றி தீமைகளால் ஏமாந்து அழிவுறுவதைத் தவிர்க்க வேண்டுமானால் கடவுளது சாயலால் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம்மைப் படைத்த இறைவன் நாம்

புதுவாழ்வு வாழ தம் மகனையே உணவாகவும், பானமாகவும் தந்துள்ளார். அவருடைய திருவுடல், திருஇரத்தம் நம்முடைய வாழ்வில் மனந்தளராமல் தொடர்ந்து வெற்றி நடைபோட ஆற்றலையும் அருளையும் வழங்கும் ஒரு உன்னதமான பரிசுதான் நற்கருணை. "கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல்" என்று நிலைவாழ்வு தரும் அழியாத உணவாக நற்கருணையில் நானிருக்கிறேன். அனுதினமும் என்காலடியில் அமர்ந்து புதிய இயல்பைக்கொண்டு வாழ நான் அழைக்கிறேன் என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு செயல்வடிவம் கொடுத்து இயேசுவை நம்பி அவரோடு இணைந்து வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காக உழைக்க எம்மை அழைக்கும் ஆண்டவரே, உமது இறையாட்சிப் பணிக்காக அழைப்பு பெற்ற குருக்களும், துறவியர்களும், தீய நாட்டங்களால் அழிவுறாமல் இலட்சியத்தை முன்னிறுத்தி தன் இறைப்பணியாற்ற உமதருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தன்னலமற்ற தலைவராம் அன்பு இறைவா, எங்கள் நாட்டையாளும் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். எங்கள் தலைவர்கள் சுயநலம் துறந்து பொதுநலத்துடன் நேர்மையோடு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு சமுதாயம் முன்னேற்றமடைய தங்கள் பணிகளைச் செம்மையாகச் செய்திட தூய ஆவியாரின் அருட்பொழிவை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துக்கொள்ள எம்மை உமது சாயலில் படைத்த ஆண்டவரே, ஒவ்வொரு நற்கருணைப் பலியிலும் வாழ்வு தரும் உணவாகிய கிறிஸ்துவை உட்கொள்ளும் நாங்கள் நற்கருணையாக மாற்றம் பெற்று, நீதியிலும், தூய்மையிலும் உமக்குகந்தவர்களாய் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. நொறுங்கிய உள்ளத்தினரை ஊக்குவிக்கும் இறைவா, கடன் பிரச்சனையால் துன்புறுவோரை கண்ணோக்கும். எங்களுக்கு தாராள உள்ளத்தோடு உதவும் நல்லுள்ளங்கொண்டோரை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.08.2024 புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I.1எசே. 2: 2-5 II. 2கொரி. 12: 7-10 மாற்கு 6: 1-6

இறையேசுவின் பக்தர்களே, இன்று மரியன்னையின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை) திருப்பலியில் கலந்துக்கொள்ள வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் இறைவன் நிறைவான அருளைப் பொழிந்தருள்வாராக. உரோமை நகரில் ஐந்து பேராலயங்கள் இருக்கின்றன. அவைகள்: லாத்தரன் பேராலயம், பேதுரு

பேராலயம், பவுல் பேராலயம், புனித லாரன்ஸ் பேராலயம் மற்றும் புனித பெரிய நாயகி பேராலயம். இதில் அன்னை மரியாவுக்கென்று நேர்ந்தளிக்கப்பட்ட பேராலயம்தான் புனித பெரிய நாயகி பேராலயம். அதனைத்தான் இன்று நாம் நினைவுக் கூர்ந்துக் கொண்டாடுகின்றோம். உரோமையில் யோவான் என்ற மரியாவின் பக்தர் ஒருவர் இருந்தார், அவர் மரியாவின்மீது ஆழமான பக்திக்கொண்டிருந்தார், இவருக்குக் குழந்தையில்லை என்பதால் இவர் மரியன்னையிடம் "நீர் எனக்கு ஒரு குழந்தை தந்தால் என் உடமைகளை எல்லாம் விற்று உமக்கு ஓர் ஆலயம் கட்டுவேன்" என்று வேண்டினார். மரியன்னை இவருக்குக் கனவில் தோன்றி நீ நகருக்கு வெளியே உள்ள பணி உறைந்திடும் "எசுக்குயிலின்" மலையில் ஒரு ஆலயம் கட்டு, உனக்கு குழந்தைத் தருகிறேன் என்று சொல்லி விட்டு மறைந்தார். யோவான் இக்கனவினை உறுதியாக நம்பினார்.

அப்பொழுது திருத்தந்தையாக இருந்த லிபேரியசிடம் சென்று கூறினார். இதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த திருத்தந்தை விரைவில் ஆலயம் கட்டி முடிக்க உதவி செய்தார். திருத்தந்தை லிபேரியஸ் மரியன்னைக்கு ஆலயம் கட்ட உதவியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அவருடைய காலத்தில் நொஸ்டோரியஸ் என்ற ஆயர் இயேசு வெறும் மனிதர் மட்டுமே அவருக்கு இறைத்தன்மை கிடையாது ஆதலால் மரியா மனித இயேசுவுக்கு மட்டும்தான் தாய் என்று சொல்லி வந்தார். இச்சமயத்தில் தான் மரியன்னையின் இக்காட்சி நிகழ்ந்தது. அவர் மரியா இறைவனின் தாய் என முழுமையாக நம்பி ஆலயம் கட்ட எல்லா வகையிலும் உதவினார். இப்பெருங்கோவில் மேற்கத்திய நாடுகளில் அன்னை மரியாவுக்கென எழுப்பப்பட்ட முதல் பேராலயம் என்பதால் இது கிறிஸ்தவ உலகில் உள்ள மரியன்னையின் திருத்தலங்கள் அனைத்திற்கும் தாய்வீடாக விளங்குகிறது. மரியன்னை கனவில் கூறியதைப் போன்றே யோவானுக்கு ஒரு அழகிய குழந்தை பிறந்தது. இதைக்கண்ட மக்கள் ஏராளமானோர் இக்கோவிலை நோக்கி வந்தவருக்கு புதுமைகள் பல நடந்ததைக் கண்ட திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் 1568ம் ஆண்டு புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா உலகம் முழுவதும் கொண்டாட அனுமதியளிக்கப்பட்டது. இவ்விழா நமக்கு உணர்த்துகின்ற உண்மை நாம் ஒவ்வொருவரும் இறைவன்மீதும் மரியன்னையின்மீதும் ஆழமான பக்திக் கொண்டு செபிக்கும்போது ஆசீர்வாதங்களையும் வரங்களையும் பெற்று வாழலாம். எனவே மரியன்னை வழியாக இறைவனில் இணைவோம், இனிய வாழ்வைப் பெற்று இனிதே வாழ்வில் மகிழ்ச்சியடைய இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உண்மையின் நாயகரே எம் இறைவா, திருஅவைக்காக மன்றாடுகிறோம். திருஅவையின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்குரிய நற்காரியங்களை சிரமேற்கொண்டு மனநிறைவோடு அவற்றை செய்து முடிக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, இன்று நாட்டில் பலவிதமான போர்களும், நெருக்கடிகளும் ஏற்பட்டு தங்களின் உறவுகளையும், உடைமைகளையும் இழந்து தவிப்போருக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்கப்பெற அருள்புரியுமாறு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் ஆண்டவரே, இன்று கிறிஸ்தவ ஆலயங்கள் கள்வர்களின் குகைகளாகவும், மேலை நாடுகளில் ஆலய பராமரிப்பின்றியும் வேற்று தெய்வங்களுக்குரிய ஆலயமாக மாற்றப்பட்டுக் கொண்டுள்ளன. இந்நிலைமாறி கிறிஸ்தவம் தழைத்தோங்கவும், இறை நம்பிக்கை அதிகரித்து கிறிஸ்தவ ஆலயங்கள் உருவாக வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. அளவில்லா மாட்சிமையின் அரசரே, மாசற்ற வெண்ணிற ஆடை அணிந்துக்கொண்டு வரும் அந்த நாளில் எங்கள் உள்ளங்களில் பொதிந்துக்கிடக்கும் அழுக்குகள் நீங்கி தூய்மையான உள்ளத்தோடு அர்ப்பணிக்க காத்திருக்கும் நன்மக்களாக எம்மை உருவாக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 06.08.2024 ஆண்டவரின் தோற்ற மாற்றம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. தானி. 7: 9-10, 13-14 II. 2பேதுரு 1: 16-19 மாற்கு 9: 2-9

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று ஆண்டவரின் தோற்ற மாற்ற விழாவினைக் கொண்டாடுகின்றோம். இந்த விழா இயேசு தம் சீடர்களுக்கு தாம் யார் என்பதை வெளிப்படுத்தும் விழாவாக இருந்தாலும், நாம் இயேசுவில் நம்பிக்கைக் கொள்வதற்கும் அவரைப் பின்பற்றுவதற்கும் அழைப்பு விடுக்கின்றது. இயேசுவின் சீடர்கள் இதுவரை அவரது சிந்தனை, சொல், செயலால் விளைந்த வார்த்தைகளையும், அதிசய அற்புதங்களையும் மட்டுமே கண்டு வியந்து போனவர்கள் "இவர் யாரோ" என்ற கேள்வியுடன் வாழ்ந்து வந்தனர். இதற்கு விடையாக 3 சீடர்களை மட்டும் தனியே அழைத்து தம் இறைத் தன்மையை காணும் பேற்றினைத் தருகிறார். இயேசுவின் உடலும், உடையும் மாறிப் போனதைக் கண்டு சீடர்கள் அச்சம் கொள்கின்றனர். மோசேயும் எலியாவும் அவருடன் உரையாடுகின்றனர். மானிட மகன் தன் பிரசன்னத்தை வெளிப்படுத்திய உடனேயே மேகம் வந்து நிழலிடுகிறது அதிலிருந்து வந்த குரல் "இவரே என் அன்பார்ந்த மகன் இவருக்கு செவிசாயுங்கள்" என்றது. இயேசு, "நானே மானிட மகன்" என்ற இறைவெளிப்பாட்டைத் தந்து, தன் பாடுகள், மரணம், உயிர்ப்புக்கு சான்று பகர சீடர்களை உறுதிப்படுத்துகிறார், உள்ளங்களை ஆயத்தப்படுத்துகிறார். அன்பிற்குரியவர்களே, இயேசுவே மானிட மகன் என நம்பும் நாம், அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பில் நம்பிக்கைக் கொண்டுள்ள நாம், அவரது உயிர்ப்புக்கு சான்றாக நம் வாழ்வை வெளிப்படுத்துவோம், அவருக்கு செவிசாய்ப்போம், நம்மைக் காண்பவர்கள்

நம்மில் இயேசுவை காணவேண்டும், அதுவே இவ்விழா நமக்கு விடுக்கும் சவால். அதற்கான அருள்வேண்டி இப்பலியை ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தான் பெற்ற இயேசுவின் அனுபவத்தை இறைமக்களுக்கு நல்ல நிலைத்தில் விழுந்த விதையாக்கும் காரணிகளாக விளங்கிட தேவையான அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் நாயகரே எம் இறைவா, எம் நாட்டுத்தலைவர்கள், அரசியல் வாதிகள் மக்களின் நல்வாழ்வை கருத்தில்கொண்டு, நீதியுடனும், அமைதியுடனும் பாரபட்சமின்றி பணிசெய்ய தேவையான அருளை நாட்டுத் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தூய அவியாரின் அருட்பொழிவை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகரே, உம்திருமுன் கூடியிருக்கும் நாங்கள், இயேசுவே மானிட மகன் என்பதை எங்கள் வாழ்வில் நம்பிக்கையோடு வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாங்கள், விசுவாசம் நிறைந்த நல்வாழ்வால் எடுத்துக்காட்டவும், உம் சொற்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. விடுதலையின் வித்தகரே, மனமாற்றம் பெறமுடியாமல் தவிப்போரும், உத்தரிப்பு நிலையிலிருந்து விண்ணகம் செல்ல முடியாமல் தவிப்போருக்கும் உமது இரக்கப்பெருக்கத்தால் வாழ்வளிக்க உம்மை மன்றாடுகிறோம்.

## 11.08.2024 பொதுக்காலம் 19ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. 1அர. 19: 4-8 II. எபே. 4: 30-5: 2 யோவா. 6: 41-51

பொதுக்காலம் 19ம் ஞாயிறு திருப்பலியை இணைந்து கொண்டாடி மகிழ்ந்து இறையாசீர் பெற்றுச் செல்ல வந்திருக்கும் அனைவரையும் அன்புடன் வரவேற்று மகிழ்கின்றேன். உடல் வலிமை பெற உணவு அவசியம். மனவலிமை பெற தூய்மை அவசியம். அந்த தூய்மையடைய தூய ஆவியின் வரங்கள் கனிகள் அவசியம். அப்போதுதான் அகமும் புறமும் ஒருங்கிணைந்து செயல்பட இயலும். இறைவனோடு இணைந்து பணியாற்றினால் ஒருநாளும் சோர்வடைய மாட்டோம் என்பதனை இன்றைய ஒவ்வொரு இறைவார்த்தைகளின் வழியாக நாம் தெளிவாக புரிந்து கொள்ளலாம். ஒரு நல்ல கருத்தை ஒருவர் சொல்லும் போது எழுதியுள்ள நூல்களை படிக்கும்போது காலத்தை வீணாக்காமல் தேவையற்ற சச்சரவுகளில் சிக்காமல் செவி சாய்த்து கேட்டு அதில் உள்ள உண்மைகளை கண்டறிந்து கவனித்து செயல்பட வேண்டும். இவற்றை

இன்று தியானிக்கும் இறைவார்த்தைகள் வழியாக இறைவனே கற்றுத் தருகிறார். நல்லவைகளை தேடும் மனநிலையும் அதனை நாடி இனிமையாக செயல்படும் வலிமையையும் இறைவனிடம் கற்றுக் கொள்பவர்கள் என்றும் கைக்கொள்ள வேண்டும். ஆகவே சிந்திப்போம் உயர்ந்த நிலையை அடைய அகத்தையும் புறத்தையும் என்றும் இளமையாக தூய்மையாக இயங்கும் தன்மையில் வைத்திருப்போம். இறைவனோடு இணைந்திருப்போம் அவரது வலிமையைப் பெற இத்திருப்பலி வழியாக செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, இறையாட்சி பணிக்கு தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட அனைத்து இறைப்பணியாளர்களும் நற்சிந்தனையோடு மக்களை நல்வழியில் நடத்த தூய ஆவியாரின் அருட்பொழிவை உறுதியோடு ஏற்று இறைப்பணியில் உயர்ந்து நிற்க அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நானே உயிரளிக்கும் உணவு என்றவரே, மனுக்குலம் மீட்படைய முழுமையாக உம்மை அர்ப்பணித்தீரே, ஆனால் பலவித போதைப் பொருள்களுக்கு அடிமையாகி தன்னையும், குடும்பத்தையும் சீரழித்து உயிரையும் இழக்கின்றனர். இவர்களை உமது இரக்கத்தால் தடுத்து காத்து மனிதம் மலர உமது வல்லமையால் நிரப்பி காத்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. பணிபுரியவே வந்தேன் என்றவரே, திருமுழுக்கு வழியாக உம்மோடு இணைந்து செயல்பட நாங்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். ஐயமின்றி உமது இறைவார்த்தைகளை உள்ளத்தில் ஏற்று உம்மையே உணவாக உண்டு, பெற்றுக் கொண்ட வல்லமையை நன்மைக்காக மட்டுமே நாங்கள் செயல்படுத்த உமதாற்றலைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. தேடி வந்த இறைவா, எளியவர்கள், ஏழைகள், பெண்கள், மூத்தோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், கூலித் தொழிலாளிகள், விவசாயிகள், நோயாளிகள் அனைவரையும் உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். இவர்களுக்குரிய உரிமைகள், உதவிகள் தடையின்றி கிடைக்கவும், ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்படாமல் நலமாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 14.08.2024 புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய இறைக்குலமே, இன்றைய தினம் புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே அவர்களின் திருப்பலியை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இவர் 1894ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள் போலந்து நாட்டில் பிறந்த கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவர். 1906ல் இவரது 12வது வயதில் மரியன்னை இவருக்கு காட்சிக் கொடுத்து தனது கையில் இரண்டு கிரீடங்களை எடுத்து வந்தார். இவை எதற்கு என்று நமது புனிதர்

கேட்க மரியன்னை வெள்ளை நிறத்தில் இருக்கும் கிரீடம் புனிதமாக வாழ என்றும், சிவப்பு நிறத்தில் இருக்கும் கிரீடம் மறைசாட்சியாக மரிக்க என்றும் கூறினார். தனக்கு இரண்டும் வேண்டுமென்று கூறிய புனிதர் அதற்காக தன்னை தயார்படுத்தவும் 1907ம் ஆண்டு தானும் தனது சகோதரர் பிரான்சிஸ் என்பவருடன் குருமடத்தில் இணைந்தார். அவ்வாறு குருமடத்தில் பயின்றுக்கொண்டிருந்தபோது உலகபோர் தொடங்கியது, அதில் இவரது தந்தை "ஜீலியஸ்" தூக்கிலிடப்பட்டார். இதைக்கண்டு இவரின் பக்தி முயற்சி அதிகரித்து, தியாக உணர்வு மேலோங்கி இவருடன் இருந்த மக்களின் விசுவாசம் அதிகரித்தது. போலந்து நாட்டை ரஷ்ய நாட்டிலிருந்து விடுவிப்பதற்காகவே மரித்த இவரது தந்தையின் இழப்பு பிறருக்காக மரிக்க வேண்டுமென்ற எண்ணம் இவருள் அதிகரித்தது.

அச்சமயம் ரஷ்யாவின் பிடியிலிருந்து தப்பிய போலந்து வீரர் ஒருவருக்காக சிறைப் பிடிக்கப்பட்ட பல பேரில் 10 நபரை உணவின்றி கொல்ல ஏற்பாடு செய்தனர். அதில் ஒருவர் தன் மனைவியையும் குழந்தையையும் நினைத்து கலங்க, அவருக்கு பதிலாக தன்னை பலிக்கொடுக்க நமது புனிதர் கூறினார். ஆனாலும் உணவின்றி 9பேரும் மரிக்க இவர் மட்டும் மரிக்க இயலாததினால் "கார்போலிக்" திரவத்தை இவரது உடலில் செலுத்தி நமது புனிதரை 1941ம் ஆண்டு அக்டோபர் 14ம் நாள் கொன்றார்கள். 1971ம் ஆண்டு அக்டோபர் 17ம் நாள் நமது திருத்தந்தை 6ம் பவுல் இவரை முத்திபேறுபெற்றவராக அறிவித்தார். பின்பு திருத்தந்தை 2ம் ஜான்பால் அக்டோபர் 1982ல் 10ம் நாளில் இவருக்கு புனிதர் பட்டம் அளித்தார். இறைவன் மேலுள்ள பக்தியால், ஒரு குடும்பத்திற்காக தன் உயிரை துறந்து, தன் மனதையறிந்த மரியன்னையின் காட்சியால் நம் புனிதரை போற்றுவோம். அவர் போன்ற தியாக உணர்வோடு வாழ இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தியாகத்தின் முன்னோடியே இறைவா, தூய அசிசியாரின் பரமபக்தரான நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், மற்றும் அனைத்து திருநிலையினரும் திருஅவையின் கோட்பாடுகளுக்கு கீழ்ப்படிந்து உமது இறையாட்சிப்பணியை செய்ய போதுமான அருள்வரங்களைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், இரக்கமற்ற படுகொலைகள், கொள்ளை, போட்டி, பொறாமைகள் நிகழ்கின்ற இக்காலச் சூழ்நிலையை மாற்றியமைக்கும் அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் வள்ளலே எம் இறைவா, உம்மீதுள்ள அளவற்ற அன்பால் பிறருக்காக உயிரை தியாகம் செய்து மறைசாட்சியாக வாழ்ந்த மாக்சிமிலியன் புனிதரைப்போல நாங்களும் தியாக முள்ளவர்களாகவும், பிறருக்காக வாழும் நல்ல எண்ணங்களை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2024 புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா மற்றும் சுதந்திர தினவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. தி.வெ. 11: 19, 12:1-6,10 II. 1கொரி. 15: 20-26 லூக். 1: 39-56

கிறிஸ்துவின் அன்பு இறைச்சமூகமே, இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு கன்னிமரியா, இவ்வுலகில் வாழ்ந்தப்பின் உடலோடும், ஆன்மாவோடும் தம் திருமகன் கிறிஸ்துவால் வானத்தூதர்களின் ஆர்ப்பரிப்போடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை நமது தாயாம் திருஅவை கடன் திருநாளாகக் கொண்டாடுகின்றது. இப்பெருவிழாவைப் பாரம்பரியமாகக் கீழ்த்திருஅவையில் நான்காம் நூற்றாண்டிலிருந்தே "அன்னை ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறார்" என்ற பொருளில் "டார்மிஷன்" எனச் சிறப்பித்துக் கொண்டாடி வந்தனர். திருத்தந்தை 5ம் பத்திநாதர் 1568ம் ஆண்டு அகில உலகத்திருஅவை முழுவதும் இவ்விழாவைக் கொண்டாட அனுமதியளித்தார். 1950ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் தேதி திருத்தந்தை 12ம் பத்திநாதரால் நம்பிக்கை அறிக்கையாக வெளிப்படுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் "ஏனோக்-365" ஆண்டுகள் வாழ்ந்து, நடந்துக்கொண்டிருந்த போது, இறைவன் அவரை எடுத்துக்கொண்டார் (தொ.நூ. 5: 23,24). யோர்தான் நதிக்கரையில் இறைவாக்கினர் "எலியா" எலிசாவோடு நடந்துகொண்டிருந்தபோது விண்ணிலிருந்து வந்த நெருப்புத் தேரும், நெருப்பு குதிரைகளும் அவரை மேலே எடுத்துக்கொண்டன (2அர.2:11). விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நம் அன்னை, மீட்பின் திட்டத்தில் துணை இரட்சகியாக இருந்து நம் ஆன்மாவின் விடுதலைக்கு வழிகோலினார். இன்று நாம் அனைவரும் 77ம் ஆண்டு சுதந்திர நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்நன்னாளில் நாம் நமக்குள்ளேயே இனம், மதம், பாகுபாடின்றி வேற்றுமைகளைக் களைந்து அன்பு, உண்மை, நீதி, நேர்மை, தியாகம், பரிவிரக்கம் எனும் அன்னையின் பண்புகளின் மாதிரியாக வாழ்வோம் என்ற உறுதிமொழியெடுத்து பக்தியோடு இக்கூட்டுத் திருப்பலியில் கலந்துக்கொண்டு இறைவனின் சாட்சிகளாக வாழ்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையாட்சியின் பண்புகளான அன்பு, இரக்கம், உண்மை, நீதி, தியாகம், பரிவிரக்கம் ஆகியவைகளின்படி வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. சுதந்திர நாயகரே எம் இறைவா, இந்திய நாடு சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டது. நாட்டையாளுகின்ற தலைவர்கள், அதிகாரிகள் உம் மக்களின் கண்ணீரைத் துடைப்பவர்களாகவும், அவர்களின் பிள்ளைகளை உமதன்பில் அரவணைத்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, பிறர் காயங்களை ஆற்றுவதில்தான் நம் காயங்கள் ஆறுகின்றன, பிறர் பாரங்களைப் பகிர்ந்து கொள்வதில்தான் நமது சுமைகளும் எளிதாகின்றன. எனவே இவ்வரிய மனிதநேய பண்புகளோடு வாழும் உயர்ந்த பண்புகளை எங்கள் உள்ளத்தில் பதித்து வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 18.08.2024 பொதுக்காலம் 20ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. T. சாம்சன்

I. நீமொ. 9: 1-6 II. எபே. 5: 15-20 யோவா. 6: 51-58

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் நற்கருணை என்னும் உயிருள்ள உணவைப்பற்றி சிந்திக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நற்கருணை என்பது இறைவனின் அளவுகடந்த அருள் என்கிறார் வீரமாமுனிவர். நற்கருணை உணவாக, உயிரோட்டம் தருவதாக, உற்சாகம் கொடுப்பதாக, உயிரளிப்பதாக, உறவை வலுப்படுத்துவதாக என்று பல பரிமாணங்களை உள்ளடக்கியது. நற்கருணையில் ஆண்டவரைக் காண்பதும் அவர்முன் அமர்ந்து செபிப்பதும் அவருடன் நடைபயில்வதும் தான் நம் ஆன்மீகம் என்று கூறப்படுகிறது. நற்கருணை இயேசுவின் கல்வாரி பலியை நமக்கு நினைவூட்டுகிறது. நற்கருணை, இயேசு நம்மோடு பிரசன்னமாயிருக்கிறார் என்ற வாக்குறுதியை தருகிறது. நாமும் இவ்வாக்குறுதியைப் பற்றிக்கொண்டு வாழவேண்டுமென்ற அழைப்பினை விடுக்கிறது.

நற்கருணை என்றால் நன்றி கூறுவது என்று பொருள். எப்போதும் நமக்கு நல்லது செய்தவர்களை நாம் நினைவு கூறுகிறோம். இயேசுவும் நமக்கு எப்போதும் நன்மையையே செய்பவர் அதனால்தான் தன் உடலையும் இரத்தத்தையும் நமக்கு உணவாகவும், பானமாகவும் தருகிறார். நாம் எப்போதும் திருப்பலியில் அவருக்கு நற்கருணை வழியாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். பசியிருக்கும்வரை தேடல் இருக்கும், தேடலின் நிறைவில் இறைவன் உணவாக இருக்கிறார், நற்கருணையே பசியின் நிறைவு அது வெறும் உணவல்ல, மாறாக, கடவுளின் வாய்சொல்லாக, பசியாற்றுபவதாக உள்ளது. எனவே நாமும் ஒருவர் மற்றவரின் தேவையை அறிந்து செயல்படவேண்டும். எப்பொழுதும் இறைபுகழ்பாடி நன்றி கூற வேண்டும். நாம் ஆழ்ந்த சிந்தனையோடு நற்கருணையை பக்தியோடு வணங்குகிறோமா? மரியாதை செலுத்துகிறோமா, என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உம்திருவுடலாம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். உம்பணியை தங்கள் வாழ்வாக்கி, இறைமக்களை அன்பின் சமூகமாக கட்டியெழுப்பவும் உம் அன்புக் கட்டளைகளை நாங்கள் கடைப்பிடித்து வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நலமருளும் நல்லாயனே இறைவா, உடல்நலக்குறைவினால் மருத்துவமனையிலும், வீடுகளிலும் இருந்து சிகிச்சைப் பெற்றுவரும் ஒவ்வொருவரையும் நற்கருணை என்னும் உயிரளிக்கும் மருந்தால் சுகம்பெற்று வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. என்றும் வாழும் இறைவா, நாட்டில் வன்முறை, கொலை, கொள்ளை, தீவிரவாதம் போன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்கவும், மக்கள் நிம்மதியுடன் வாழத் தேவையான பாதுகாப்பை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இன்று படிக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்குத் தேவையான நல்ல ஞானத்தையும், பணஉதவியும், பொருளுதவியும் அளித்து அவர்கள் உம்மை பற்றிக்கொண்டு பின்தொடரத் தேவையான அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 24.08.2024 புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

திருத்தூதரான புனித பார்த்தலமேயு திருநாளை சிறப்பித்து தியானித்து கொண்டாட திரு அவையின் மக்களாக இங்கு கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் மகிழ்வோடும் அன்போடும் வரவேற்கின்றோம். இவருக்கு மற்றொரு பெயர் உண்டு நத்தனியேல். இப்படித்தான் திருநூலில் அறிகிறோம். இவர் கானாவூரைச் சேர்ந்தவர் எனவும் இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் கி. பி. 02 ம் நூற்றாண்டில் ஆரிஜன் என்ற மறைவல்லுநரின் ஆசிரியர் பான்டனேஸ் என்பவர் இந்தியா வந்து மறைப்பரப்பு பணிபுரிந்த காலத்திற்கு முன்பே பார்த்தலமேயு வந்து எபிரேய மொழியில் தாம் வைத்திருந்த மத்தேயு திருநூலின்படி போதித்தார் எனவும் இதையே இந்திய திருஅவை அக்காலத்தில் பெரும் புதையலின் செல்வமாக வைத்திருந்ததாகவும் குறிப்பிடுகிறார். கடந்த ஆயிரம் ஆண்டுகளாக இவரது திருப் பண்டங்கள் உரோமையில் டைபர் நதிக்கரையில் அமைந்துள்ள ஆலயத்தில் புனிதமாக வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில மாறுபட்ட கருத்துகளும் உள்ளன.

எது எவ்வாறாயினும் பார்த்தலமேயு என்றால் சலோமின் மகன் என பொருள். இவரைத்தான் புனித யோவான் 01:47ல் நத்தனியேலாக

சந்திக்கிறோம். அதன் பிறகு வரும் உரையாடலையும் வாசிக்கிறோம். இவர் வருவதை கண்டவுடனே "இவர் உண்மையான இஸ்ரயேலர், வஞ்சகமற்றவர்" என இறை இயேசு இவரைக் குறித்து கூறுகிறார். மேலும் தொடர்ந்து இதனைவிட "பெரியவற்றைக் காண்பீர்" எனவும் கூறுவதை யோவான் 21 : 14 லில் காணலாம். இறைவனின் பிள்ளைகளாக இறை இயேசுவின் உடன் பிறப்புகளாக இணைக்கப்பட்ட நாம் நல்லது எதுவும் வருமோ என்ற உள்ளத்தின் ஏக்கங்களுக்கு நாம் வஞ்சகமற்றவராக இறைப்பதம் நாடும்போது திருத்தூதர்களுக்குத் தோன்றி வலையை வீசுங்கள் என்பதனை பின்பற்றி இன்னமும் அதிக அதிகமாக பெரும் அதிசயங்கள் அற்புதங்கள் கண்டு மகிழ்ந்ததுபோல் நாமும் இறை இயேசுவின் அருகில் நெருங்கி வந்து அருளும் ஆசீரும் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தேர்ந்தெடுக்கப்பட்ட எமது திரு அவைப் பணியாளர்கள் அனைவரும் புனித பார்த்தலமேயுவைப் போல் இறைவனோடு நெருங்கியிருந்து அவரது குரலுக்கு செவிசாய்த்து அதனை பின்பற்றி வாழவும் மக்களை வழிநடத்தவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. வலைகளை வீசுங்கள் என்றவரே, பேராசைகளினால் எங்கே எப்படி சென்றால் நிறைய சம்பாதிக்கலாம் என்ற நினைப்பில் விளம்பரங்களின் கவர்ச்சியில் கவரப்பட்டு இணைய வழியில் பல இலட்சம் பணத்தை இழந்து தன்னையும் இழக்கும் நிலை எங்களுக்கு வேண்டாம் நீர் கூறும் திசையில் நாங்கள் பயணித்து நிலையானதைப் பெற்று நிம்மதியாக வாழ வழிகாட்டிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் ஊற்றே எம் இறைவா, இக்கால சூழலில் பெண்கள் தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் இரு பக்கமும் உழைக்க வேண்டியுள்ளது. குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் சவால்களை எதிர்கொள்ளும் அவர்களது மாண்புகள் காக்கப்பட்டு இம்மாதம் அன்னையின் கொடி உயர்வதுபோல் வாழ்வு உயர அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 25.08.2024 பொதுக்காலம் 21ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

**I.** யோசு. 24: 1-2,15-17,18 **II.** எபே. 5: 21-32 யோவா. 6: 60-69

இறையேசுவின் அன்புப் பிள்ளைகளே, நாம் பொதுக்காலம் 21ம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்துள்ளோம். நாம் புனிதர் பிரான்சு நகர் லூயிஸ் விழாவினைக் கொண்டாடுகின்றோம். இவர் 1214ம் ஆண்டு 8ம் லூயிஸ் மன்னர், தாய் காஸ்டிலின் 8ம் அல்போன்சா என்பவருக்கு பாய்ஸ்சி என்னும் இடத்தில் பிரான்சில் பிறந்தார். இவர் தமது 12ம் வயதில்

தந்தையை இழந்தார். தமது இளம் வயதில் புனிதத்துவ செயல்களால் ஈர்க்கப்பட்டார். திருப்பலி நேரத்தில் விசுவாசப்பிரமாணம் சொல்லும் பொழுது "மனிதர் ஆனார்" என்னும் சொற்களின்போது முழந்தாளிட்டு வணங்கத் தொடங்கியவர் இவரே. நாற்பது ஆண்டு காலம் பிரான்சு நாட்டை ஆட்சி செய்த இவர் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புண்ணிய பூமியை முகம்மதியர்கள் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டபோது 1238ம் ஆண்டு புண்ணிய பூமியை மீட்க வேண்டுமென்று அவர்களுடன் போர் தொடுத்தார். போரில் முகமதியர்களால் சிறைபிடிக்கப்பட்டார். இந்த போருக்கு "சிலுவைப்போர்" என்று பெயர். போர் நடக்கும்போது பிரான்சு நாட்டினர் "இடைக்கால போர் நிறுத்தச்சட்டம்" கொண்டு வந்ததால் போர் நிறுத்தம் செய்தனர். இவர் விடுதலையடைந்தார். மீண்டும் இறைபக்தியும், ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்ட இவருக்கு கிறிஸ்தவ புண்ணிய பூமியை மீட்க பிரான்சிலிருந்து கிழக்கு நோக்கி மீண்டும் போர் தொடுத்தார்.

இதற்குப் பிறகு இவர் தமது நாட்டுக்கு (பிரான்ஸ்) திரும்பிச் செல்ல இயலாமையாயிற்று. இவர் பிரான்சு நாட்டில் திருஅவை வளர்க்க அரும்பாடுபட்டார். திருஅவை செழித்தது. இவர் பிரான்சில் அதிகமான துறவற இல்லங்களையும், மருத்துவமனைகளையும் கட்டினார். குருடர்க்குத் தனியாக விடுதிகள் அமைத்தார். ஏழைகளிடமும், நோயாளிகளிடமும் பரிவுடனும், அன்புடனும் பேசி பழகுவார். பெண்கள் வாழ்க்கையில் தவறான பாதையில் செல்பவர்களை திருத்தி நல்வழி காட்டி, பாதுகாப்பாக இருக்க இடம் அமைத்தார். சமூக வழக்குகளை விசாரித்து நேர்மையான நீதி வழங்குவார். 2ம் புனிதப்போரில் நோய்வாய்ப்பட்டு படுத்தப்படுக்கையாகிவிட்டதால் இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்று பின் இறைவனடி சேர்ந்தார். 1297ம் ஆண்டு இவருக்கு "புனிதர் பட்டம்" வழங்கப்பட்டது. இப்புனிதரைப் போல இறைவன்மீதும், அவர் வாழ்ந்த, நடந்த, பிறந்த மரித்த இடங்களை மீட்கவும் இறைவனின் பாதையில் வழிநடந்து நமக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதுபோல நாமும் இறைவனின் விழுமியங்கள்படி வாழ இப்புனிதரின் துணை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, உம்மை நம்பி உம் விழுமியங்களை ஏற்று அவைகளை மக்களுக்கு கொடுக்க தயாராக இருக்கும் திருஅவையின் தலைவர்கள் அனைவரையும் உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்கள் அனைவரும் இறுதிவரை உம்மில் நிலைத்திருக்கும் வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அடிமைத்தளைகளை அகற்றியவரே, புனித யோசுவாவைப்போல் நாங்கள் உம்மில் பற்றுறுதியுடன் வாழவும், உம்மில் என்றும் நிலைத்து நிற்கவும், என்ன நேர்ந்தாலும் நன்றி கூறி உம் திருவுளப்படி

நடக்க வேண்டிய அருளைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. திருக்குடும்ப நாயகரே, மரியன்னையுடன் சூசையப்பர் வாழ்ந்ததுபோல, எங்களின் குடும்பத் தலைவர்களும் தங்களின் மனைவியரோடும், இறைவேண்டலோடு ஒருவரையொருவர் மதித்து, அன்பு செய்து குழந்தைகளுக்கு முன்மாதிரியாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, விசுவாசத்தின் ஆணிவேராக தமது திருத்தூதர்களிடமும் மற்ற சீடர்களிடமும் என் தந்தையை விசுவசித்து தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பெற்று வாழவும், உண்மையான ஆழமான விசுவாசத்தை பற்றிக்கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.08.2024 அருளாளர் செப்ரீனோ நமுங்க்குரா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அருளாளர் செப்ரீனோ நமுங்க்குரா 1886ம் ஆண்டு ஆகஸ்டு 26ம் நாள் சிம்ப்பே என்னும் ஊரில் பிறந்தார். இவ்விடம் அர்ஜென்டினா நாட்டில் உள்ளது. இவர் தூய ஜான்போஸ்கோவின் இல்லத்தில் தங்கி ஆன்மீக அனுபவம் பெற்றார். பின்பு ஜான்போஸ்கோவின் சந்திப்பு இவரது வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைத் தந்தது. இவர் தூய டோமினிக் சாவியோவையும் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தார். இவர் பக்தியிலும், கடமையிலும் தியாகம் செய்வதிலும் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். மாணவர்களிடையே ஏற்படும் எல்லா பிரச்சனைகளையும் தன்னுடைய அன்பான வார்த்தைகளால் தீர்த்து வைப்பார். இவர் தம்முடைய நண்பர்களுக்கும், பிற மாணவர்களுக்கும் சிலுவை அடையாளம் எப்படி வரைவது என்பது குறித்து கற்றுக்கொடுத்தார்.

ஆயர் கலியரோ இவரை இளம் குருமாணவராகும் பொருட்டு இளம் குருமடத்தில் சேர்த்தார். புனித செப்ரீனோ இத்தாலிக்குச் சென்று திருத்தந்தை பத்தாம் பயஸைச் சந்தித்தார். இவர் தூரினிலும், வில்லா சேராவிலுள்ள சலேசியக் கல்லூரியிலும் கடின முயற்சியுடன் கல்வி கற்றார். இவரது உடல்நிலையில் நலிவு ஏற்பட்டு, காசநோயினால் பெரிதும் துன்பப்பட்டார். 1905 மார்ச் 28 அன்று உரோமையிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். காலதாமதமான மருத்துவ சிகிச்சையினால் இவர் 1924 மே 11ம் நாள் மன அமைதியுடன் இறைவனடி சேர்ந்தார். இவரது உடல் இவரின் சொந்த நாடான அர்ஜென்டினாவில் போர்டின் மெர்சேடஸ் என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவரது கல்லறையில் 2000ம் ஆண்டில் ஒரு அற்புதம் நடைபெற்றது. 2007ம் ஆண்டு நவம்பர் 11ம் நாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். இவரது வழியைப்பின்பற்றி நமது இளைஞர்கள் தூய வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பிறப்பின் முழுமுதற்காரணரே எம் இறைவா, திருஅவையின் தலைவர்களாகிய திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் அனைவரும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டதை தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை வழிநடத்தத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் பரம்பொருளே, இந்திய நாட்டையாளும் அனைத்து தலைவர்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். ஒவ்வொருவரும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வோடு பணியினை சிறப்பாகச் செயல்படுத்தத் தேவையான அருளைப்பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணைக்கடலே இறைவா, மாணாக்கர்களின் நலனில் அக்கறைக் கொண்ட அருளாளர் செப்ரீனோ வழியில் மாணவச் செல்வங்கள் பயனுள்ள முறையில் கல்வி கற்று, சமுதாயத்தின் வளர்ச்சிக்காகத் தங்களது கல்வி அறிவைப் பயன்படுத்தி மற்றவர்களையும் அவ்வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.08.2024 புனித அகுஸ்தின் திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரில் அன்புறவுக் கொண்ட இறைச்சமூகமே, இன்று ஆயரும் மறைவல்லுநருமான புனித அகுஸ்தினாரின் நினைவைக் கொண்டாடுகின்றோம். இவரது வாழ்வு பெண் இச்சையாலும், மக்கேனியம் என்ற தப்பறைக் கொள்கையாலும் ஊறிப்போய் இருந்தது. இவரின் தாய் புனித மோனிக்காவின் கண்ணீர் நிறைந்த மன்றாட்டினால் மனம் திரும்பியவர். தன் 19வது வயதில் "ஹோரா் டென்சியஸ்" என்ற நூலைக் கற்று ஞானத்தைப் பருகிக் கொண்டே இருக்க வேண்டுமென்ற ஆவல் அவர் உள்ளத்தில் எழுந்தது. பல நாடுகளுக்கு சென்று உயர்ந்த கலைகளை கற்றுத்தேர்ந்தார். தன் 30வது வயதில் மக்கேனியத் தப்பறை தவறு என்று உணர்ந்தார். பின் ஆயர் அம்புரோசின் மறையுரையால் தெளிவுப்பெற்று மீண்டும் விவிலியம் படிக்கத் தொடங்கினார்.

"ஆண்டவரே எனக்கு கற்பு எனும் புண்ணியத்தைத் தாரும்" என்று செபித்தார். பூங்கா ஒன்றில் அமர்ந்திருந்த வேளையில் சிறுவன் ஒருவன் தோன்றி "எடுத்துவாசி" என்று சொல்லி மறைந்தான். உடனே புனித பவுலின் கடிதத்தை எடுத்து வாசித்தார். "இரவு முடியப்போகிறது பகல் அண்மையில் உள்ளது, ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களை கலைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து

கொள்வோமாக" (உரோ.13:12). உடனே அன்புரோசியாரிடம் சென்று தன் தீச்செயல்களை இறைவன் மன்னிக்கும்படி வேண்டினார். பின்பு தன் 32வது வயதில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். அரிய பல நூல்களையும், இறைவெளிப்பாடு கோட்டுபாடுகளையும் திருஅவைக்கு எழுதித்தந்த ஆயராவார். தப்பறைகளை கடுமையாக எதிர்த்து வாதிட்டார். அன்பிற்குரியவர்களே, இப்புனிதரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் "உன் வாழ்க்கையில் நீ புரியும் செயல்களுக்கு நீயே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ புரியும் செயல்களுக்கு அலகையோ, அடுத்தவர்களோ பொறுப்பல்ல, எனவே நமது வாழ்வை இறைவனுக்கேற்ற வாழ்வாக வாழவும், நமது ஆன்மாவை இறைவனின் உதவியுடன் மீட்டுக்கொள் என்பதே". இதை உணர்ந்து நம் செயல்களுக்கு நாம் பொறுப்பேற்று இறைவன் திருமுன் திறந்த மனதுடன் மன்னிப்பு கேட்கவும், அவர்தரும் அருளைப்பெற்று புதுவாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் உம்பணியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, புனித அகுஸ்தினாரைப்போல் இறைப்பற்றுடன் மக்களை வழிநடத்தி, தங்கள் கடமைகளை பொறுப்புடன் செய்திட அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டில் இயற்கை வளம் பேணப்படவும், விவசாயம், நீர் ஆதாரம் பாதுகாக்கப்படவும், பல்வேறு தொழில் முன்னேற்றங்கள் நாட்டில் பெருகிடவும் அதனால் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் கண்டு உமக்கு நன்றியுள்ள மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் நாட்டுத்தலைவர்களும், அரசியல்வாதிகளும், தங்களின் செயல்களுக்கு தாங்களே பொறுப்பாளர்கள் என்பதை உணர்ந்து, பிறரைக் குறைக்கூறாமலும் காயப்படுத்தி உறவுச் சிக்கலை ஏற்படுத்தாமல் அனைவரையும் சமமாக மதித்து நடத்திட வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 29.08.2024 புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமானவர்களே, திருமுழுக்கு யோவான் குற்றவாளிகளைக் குற்றவாளி என்று சொல்லத் தயங்கவில்லை. உண்மையை அறிவிக்கவும் அஞ்சவில்லை. தன்னை யாரென்று கேள்வி கேட்டவர்களிடம் தன்னைப்பற்றி பெருமையாக பேசாமல் மிகவும் எளிமையாக, என் பணியை முடித்தப்பின் மறைய வேண்டியவன் நான் "அவர்" அதாவது "வர இருப்பவர் உங்கள் நடுவில் இருக்கின்றார்" நெருப்பினாலும், தூய ஆவியாரால் திருமுழுக்குத்தர வருபவரின் முன்னோடி

நான் என்றார். நம்பிக்கையில் திளைக்கவும், அதில் நிலைத்திருக்கவும் விரும்பியவர்கள் திருமுழுக்கு யோவானைப் பின்தொடர்ந்தனர். இயேசு தம்மிடம் வருவதைக்கண்டு, இதோ, கடவுளின் ஆட்டுக்குட்டி, உலகத்தின் பாவம் போக்க வந்தவர் என்று சொல்லி தம் சீடர்களை இயேசுவிடம் அனுப்பிவிட்டு முற்றிலும் மறைந்து வாழ்ந்தவர். யோவானை மக்கள் கூட்டம் நெருங்கிப் போவதையும் அவர் சொல்வதையெல்லாம் செய்யும் மனநிலை அடைந்ததையும் கண்ட ஏரோது மனம் வெதும்பினான். மக்கள் தன்னை தூசியாக எண்ணுகிறார்கள் என்று அஞ்சி தூயவர் திருமுழுக்கு யோவானை சிறையில் அடைத்து துன்புறுத்தினான். தன்னை அனைவர் முன்பும் வெளிப்படையாக அஞ்சாமல் தவறுகளை சுட்டிக்காட்டிய யோவானை ஏரோதியால் சூழ்ச்சியாக யோவானின் தலையை வெட்டி கொலை செய்தாள். உண்மைக்கும், நேர்மைக்கும், நீதிக்கும் சாட்சி பகர்ந்தவர் இரத்த சாட்சியாக உயிர் நீத்தார். நாம் கத்தோலிக்க குடும்பங்களில் பிறந்தது, திருமுழுக்குப் பெற்றது, திருஅவையில் வளர்வது, திருவருட்சாதனங்களை பெறுவது எதற்கு தெரியுமா? ஒவ்வொரு நாளும் இறையன்பில் வாழ்ந்து, ஆண்டவரின் இறை ஊழியராக பணிபுரிந்து நம் வாழ்வின் வழியாக சொல், செயல்வழியாக ஆண்டவர் மாட்சிப் பெறவும், உண்மைக்கும் நேர்மைக்கும் சாட்சிப் பகிரவும் அச்சமின்றி இறைப்பணிப் புரிவதும் நமது கடமை என்பதை உணர்ந்து செயல்பட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியாரின் வழிநடத்துதலால் திருமுழுக்கு யோவானைப்போல மனவுறுதியுடன் அஞ்சாமல் இறைப்பணி செய்யும் ஆற்றலை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தியாகத்தின் இருப்பிடமே, திருமுழுக்கு யோவானுக்கு நீர் குறித்த திட்டத்தை உம்மோடு இணைந்து ஒத்துழைக்க ஆற்றலை அளித்ததுபோல, நாங்களும் எங்களுக்கு நீர் வைத்துள்ள திட்டத்தை உமது மாட்சிமைக்காக எங்கள் வாழ்வில் வரும் சவால்களை எதிர்கொண்டு செயல்படும் ஆற்றலைத் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, திருமுழுக்கு யோவானின் பிறப்பால் அனைவரும் மகிழ்ந்ததுபோல நம்முடைய பிறப்பால், செயல்களால், வார்த்தைகளால் நம்மைச் சார்ந்தவர்கள், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அனைவருக்கும் நம்மால் இயன்ற உதவிகளை அளித்து, அவர்களில் இறைச்சாயலைக் கண்டுகொள்ள வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கன்னி மரியா ஓர் அரசி

திரு. டே. ஆக்னல்

தூய கன்னி மரியாவின் விண்ணேற்பை ஆகஸ்ட் 15ந்தேதி கொண்டாடி மகிழும் கத்தோலிக்கத் திருச்சபை, 22ந்தேதி அவரை ஓர் அரசியாகச் சிறப்பிக்கிறது. 1950 நவம்பர் முதல் நாளன்று திருத்தந்தை 12ம் பயஸ், கன்னி மரியாவின் விண்ணேற்பை ஒரு "விசுவாச மெய்கோள்" (டோக்மா) என்று அறிவித்தார். ஆயினும், திருச்சபையின் தொடக்க காலம் முதலே அன்னை மரியாவின் விண்ணேற்பு குறித்த நம்பிக்கை கிறிஸ்தவர்களிடம் நிலவியது. நான்காம் நூற்றாண்டிலேயே அவரது நினைவு நாளை விண்ணகப் பிறப்பாகக் கொண்டாடும் வழக்கம் அந்தியோக்கு நகரில் இருந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. திருத்தூதர் யோவானோடு எபேசு நகரில் வாழ்ந்து வந்த அன்னை மரியா, தமது இறுதிக்காலம் நெருங்கி வருவதை அறிந்து அவரோடு எருசலேம் சென்றார். அன்னையின் இறப்புக்கு முன்பாக அவருக்கு காட்சியளித்த கபிரியேல் வானதூதர், மூன்று நாட்களில் அவர் விண்ணக மாட்சியில் இருப்பார் என்பதை முன்னறிவித்தார். அவ்வாறே, பல்வேறு நாடுகளில் நற்செய்தி போதித்து வந்த திருத்தூதர்களுக்கும் அன்னையின் இறப்பு குறித்து முன்னறிவிப்பு வழங்கப்பட்டது. இதையடுத்து, திருத்தூதர்கள் அனைவரும் அன்னை மரியாவைச் சந்தித்து இறுதி ஆசி பெறுவதற்காக எருசலேம் நகருக்கு விரைந்து சென்றனர்.

திருத்தூதர் தோமாவைத் தவிர மற்றத் திருத்தூதர்கள் அனைவரும் ஆசி பெற்ற நிலையில், அன்னை இறைவனில் துயில் கொண்டார். விண்ணக மாட்சியால் ஒளி வீசிய அவரது உடலை, திருத்தூதர்கள் சுமந்து சென்று குகை ஒன்றில் அடக்கம் செய்தனர். மூன்று நாட்கள் தாமதமாக எருசலேமை அடைந்த தோமா, அன்னை இறந்து அடக்கம் செய்யப்பட்ட செய்தியைக் கேட்டு கலங்கி கண்ணீர் வடித்தார். அன்னையிடம் இறுதி ஆசியைப் பெற முடியாத நிலையில், அவரது முகத்தையாவது ஒருமுறை காண வேண்டும் என்கின்ற தமது ஆவலை மற்றத் திருத்தூதர்களிடம் அவர் வெளிப்படுத்தினார் அவர்களும் ஒப்புக்கொள்ளவே, திருத்தூதர்கள் அனைவரும் புறப்பட்டு அன்னை மரியாவின் கல்லறைக்குச் சென்றனர். அதைத் திறந்து பார்த்த வேளையில், உள்ளே அவரது உடலைக் காணவில்லை என்பதுடன் ஒப்பற்ற நறுமணமும் வீசியது. இதனால் ஆண்டவர் இயேசுவைப் போன்றே, அவரது அன்னை மரியாவும் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் சென்றுவிட்டார் என்று திருத்தூதர்கள் புரிந்து கொண்டனர். தோமா மிகுந்த வருத்தத்தோடு விண்ணகம் நோக்கி செபித்தபோது, அன்னை மரியா விண்ணக மாட்சியுடன் ஓர் அரசியாகத் தோன்றித் தமது இடைக்கச்சையை அவருக்குப் பரிசளித்து மறைந்தார்.

ஆகவே, மாசற்ற கன்னி மரியா தமது மண்ணக வாழ்வு நிறைவுற்றதும், உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றார். மேலும் அனைத்துக்கும் அரசியாகவும் ஆண்டவரால் உயர்த்தப்பட்டார். இவ்வாறு ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவரான தமது மகனுக்கு இன்னும் முழுமையாக ஒத்தவரானார். புனித கன்னியின் விண்ணேற்பு அவரது "மகனின் உயிர்ப்பில் தனிப்பட்ட பங்கேற்பாகவும், மற்றக் கிறிஸ்தவர்களின் உயிர்ப்புக்கு முன்னடையாளமாகவும் இருக்கிறது" என்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (எண் 966) வெளிப்படையான விதத்தில் போதிக்கிறது. கன்னி மரியா இறைமகன் இயேசுவின் தாயாகும் பேறுபெற்ற வேளையில், "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவள் என்பர். ஏனெனில், வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" என்று மகிழ்ந்து பாடுகிறார். இவ்வாறு விண்ணகமும் மண்ணகமும் உருவாகக் காரணமான வாக்கானவரை (இயேசுவை) தமது கருப்பையில் சுமக்கும் பேறு மரியாவுக்கு கிடைத்தது. ஆகவே, விண்ணக மண்ணக அரசரான இயேசுவின் தாய் என்ற முறையில், விண்ணக மண்ணக அரசி என்றப் பட்டம் அவருக்கு உரித்தாகிறது.

அன்னை மரியா இயேசுவைப் பெற்றெடுத்தபோது, அவரது கன்னிமைக்குப் பழுது ஏற்படாத வகையில் கடவுள் காப்பாற்றினார். அத்தகையவரின் உடல் இறப்புக்குப் பின்பு அழிந்து போகக்கூடாது என்பது பொருத்தமானது. படைத்தவரைக் குழந்தை வடிவில் தமது உடலில் தாங்கிக் கொண்டவர் அதே உடலோடு கடவுளின் இல்லத்தில் இடம்பெறுவதும், தாய் என்ற முறையில் இறைமகன் உவந்தளிக்கும் சலுகைகளைப் பெற்று மகிழ்வதும் பொருத்தமானதே. "மரியா படைத்தவரின் தாயாக ஆனபோது, உண்மையில் படைப்புகளின் அரசியாகவும் உயர்வு பெற்றார்" என்று தமஸ்கு புனித யோவான் கூறுகிறார். எபிரேய மரபில் ஓர் அரசரின் தாயே அரசிக்குரிய மரியாதை அனைத்தும் பெறுவதற்கு தகுதியானவராகக் கருதப்பட்டார். சாலமோன் உள்பட பல அரசர்களின் வாழ்வில் இதைக் காணலாம். அரசி என்னும் முறையில், மரியா ஒப்பிட இயலாத மாட்சிக்கு உயர்த்தப் பெற்றுள்ளார். கிறிஸ்துவைக் குறித்து திருப்பாடலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "என்றுமுளது உமது அரியணை" (45:6). அதன்பின் உடனடியாக மரியாவைக் குறித்து, "வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி" (45:9) என்றுள்ளது. அதாவது மரியா உன்னத ஆசியால் நிரப்பப் பெற்று அரசியாகத் திகழ்கிறார்" என்று புனித பொனவெந்தூர் எடுத்துரைக்கிறார்.

"கெருபுகள் மற்றும் சேராபீன்களை விடவும் தூயவராக, கேள்விக்கு இடமின்றி மற்ற அனைத்துப் புனிதர்களை விடவும் மாபெரும் மாட்சியில் மரியா அக்களிக்கிறார். ஏனெனில், அவர் அருள் நிறைந்தவராக இருக்கிறார். மகிழ்ச்சியுடன் நமக்காக மீட்பரைப் பெற்றெடுத்த அவர் கடவுளின் தாய்" என்று திருத்தந்தை 12ம் பயஸ் குறிப்பிடுகிறார். "மரியா

கடவுளின் தூய்மைமிகு தாய் என்பதால், எல்லா வானதூதர்களுக்கும் மேலாக கடவுளின் அருளால் உயர்த்தப் பெற்றுள்ளார்'' என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கிறது. இவ்வாறு, அன்னை மரியாவின் விண்ணக மாட்சி நமக்குத் தெளிவாக விளங்குகிறது. "பெண் ஒருவர் காணப்பட்டார், அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது, அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்'' என்ற திருவெளிப்பாட்டு நூலின் (12:1) விவரிப்பு ஒருவிதத்தில் அன்னை மரியாவின் விண்ணக மாட்சியைக் காட்டுகின்றது. ஏனெனில், அவரே உலக மக்களை இருப்புக்கோலால் நடத்தும் அரசரான இயேசுவைப் பெற்றெடுத்த அரசி. அனைத்துலக அரசராம் இயேசுவின் தாயாக இருப்பதால், மரியாவும் அனைத்துலக அரசியாக இருக்கிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அந்த அரசியைப் பின்பற்றி, நமது தாழ்ச்சியால் மேன்மை அடைவோம்.

## புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே - வாழ்வு தரும் பாடம்

திரு. பி. விக்டர்

புனித மாக்சிமிலியன் கோல்பே அவர்கள் போலந்து நாட்டில் 1894ம் ஆண்டு ஜனவரி திங்கள் எட்டாம் நாள் பிறந்தார். அந்நாட்களில் போலந்து நாடு ஜெர்மனி நாட்டின் ஆக்கிரமிப்பு பகுதியாக இருந்தது. இவரது தந்தை போலந்து நாட்டில் வாழ்ந்த ஒரு ஜெர்மனியர், தாய் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். ஜெர்மனியரின் அடக்குமுறைகளிலிருந்து போலந்து நாட்டை விடுவிக்கும் போராட்டத்தில் போலந்து மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலம். இவரது தந்தையர் போலந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடியதால் ஜெர்மனியர்களால் கைது செய்யப்பட்டார், பின்னர் தேச துரோக குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். கோல்பே அவருக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் இருவர் காசநோயால் இறந்தனர். இவருக்கு 12 வயது நடந்தபோது கன்னிமரியாவின் தரிசனத்தைக் கண்டார். அந்த தரிசனத்தில் தூய்மையையும் தியாகத்தையும் தன்வாழ்வில் கைக்கொள்வதாக அன்னை மரியாளுக்கு இவர் வாக்களித்ததாகத் தெரிவித்தார்.

இவரும் இவரது சகோதரர் பிரான்சிஸ் அவர்களும் பிரான்சிஸ்கன் துறவற சபையில் இணைந்து குருவாக விருப்பம் தெரிவித்து கல்வி பயின்றனர். அங்கிருந்து உரோமை சென்று கல்வி பயின்று இறையியலிலும் தத்துவ இயலிலும் முனைவர் பட்டங்களைப் பெற்றனர். பிரான்சிஸ்கன் சபையில் குருவாக 1918ல் திருநிலைப்படுத்தப்பட்டார். குருவானவரான பின்பு போலந்து திரும்பிய கோல்பே அவர்கள் மாதாந்திர இதழான "The knight of the immaculate" என்ற இதழைத் தொடங்கினார். இது பக்தி வெளியீடாக மலர்ந்தது. அது பல ஆயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டு மக்களைச் சென்றடைந்தது. பிறகு கோல்பே அவர்கள் ஒரு வானொலி நிலையத்தையும் தொடங்கி நடத்தலானார். இந்த வானொலி நிலையம்

மரியாளின் பக்தியைப் பரப்புவதற்காகவும் பயன்பட்டது. அந்நாட்களில் ஜெர்மானிய நாட்டு படைகளின் அடக்குமுறைகள் அதிகமாயின. இவ்வித அடக்குமுறைகளிலிருந்து தன்நாட்டு மக்களை காப்பதற்கான வழிமுறைகளையும் இந்த வானொலி நிலையம் வழியாக மக்களுக்குக் கற்பித்து வந்தார். இதனால் மக்கள் விழிப்புணர்வு பெற்று ஓரளவு தங்களைக் காத்துக் கொண்டனர். உரோமையில் இருந்த காலத்தில் அன்னை மரியின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட 'City of the Immaculate" என்கிற பிரான்சிஸ்கன் சபையை நிறுவினார். இந்நிறுவனம் மூலம் அங்கும் அன்னை மரியின் பக்தியைப் பரப்பினர்.

மறைப்பரப்பு பணியை விரும்பி கோல்பே அவர்கள் இன்னும் சில பிரான்சிஸ்கன் குருக்களோடு இணைந்து "சீனா" நாடு நோக்கி பயணமானார். ஆனால் அங்குள்ள கடுமையான எதிர்ப்பினிமித்தம் ஜப்பான் நாட்டிலுள்ள "நாகசாகி" நகருக்குச் சென்று அங்கும் அன்னையின் பெயரில் 'City of the Immaculate' சபையை நிறுவி பணி செய்தனர். இரண்டாம் உலகப்போரின்போது "அணுகுண்டால்" நாகசாகி நகரம் அழியும்வரை அங்கு பணி செய்தனர். இவர்கள் பணி செய்த பகுதி பாதிக்கப்படாத போதிலும் அங்கிருந்து போலந்து திரும்பினர். அங்கு அவர் கண்ட காட்சி வேதனையளிப்பதாய் இருந்தது. ஏனெனில், ஜெர்மானியர்கள் போலந்தில் தாங்கள் வாழ்ந்த பணி செய்த பகுதிகளை முழுமையாக ஆக்கிரமித்து கொடுங்கோலாட்சி நடத்திக்கொண்டு இருப்பதைக் கண்டு கண் கலங்கினார். எனவே அங்கு ஒரு மருத்துவமனை நிறுவி, ஜெர்மானியர்களால் பாதிக்கப்பட்ட போலந்து மக்களுக்கு அகதிகளுக்கு உதவிகளை செய்து வந்தார். அங்கு சுமார் 2000ம் யூதர்களை மறைத்து வைத்து பாதுகாத்து வந்தனர். தொடர்ந்து ஒரு துறவிகள் இல்லத்தை நிறுவி, ஜெர்மானிய ஜாதிகளின் கொடுமைகளை எதிர்த்து "பிரசுரங்களை" வெளியிட்டு வந்தார்.

இதனால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டு பின்னர் விடுதலை பெற்றார். ஆனால் தொடர்ந்து ஜாதிகளின் கொடுமைகளை எதிர்த்து, மக்களுக்கு தனது துறவு இல்லத்திலிருந்து செய்திகளை அனுப்பி அவர்களை சுதந்திர போலந்திற்கு போராட தூண்டியதாலும் யூதர்களைக் காப்பாற்றி பாதுகாத்து வந்ததாலும் மீண்டும் 1941ல் கைது செய்யப்பட்டு "வர்சா" நகரில் சிறை வைக்கப்பட்டார். இவரது துறவிகள் மலபார் ஜெர்மானியர்களால் மூடப்பட்டது. பின்னர் கோல்பே அவர்களும் அவருடன் மற்ற நான்கு பேரும் கைதிகளாக ஆஷ்விட்சீக்கு மாற்றப்பட்டனர். "ஆஷ்விட்ஸ்" சிறையென்பது கடினமானதும் கொடுமைகள் நிறைந்ததுமாய் இருந்தது. ஆனால் அங்கு நமது கோல்வே அவர்கள் தனது குருத்துவப் பணியைத் தொடர்ந்து செய்தார். உணவுக்காக கொடுக்கப்படும் ரொட்டித்துண்டுகளை வைத்து திருப்பலி நிறைவேற்றியும், பாவமன்னிப்பு கேட்டும் அவருடனிருந்த மற்ற கைதிகளை ஊக்கப்படுத்தினர். இறைவன்மீதும், கன்னி மரியாளின்மீதும் நம்பிக்கையூட்டினார். இதைக்கண்ட சிறை அதிகாரிகள் இவரை அடித்தும், வசையாடியும் கடும் துன்பத்திற்குள்ளாக்கினர்.

இவ்வாறு இருந்த நிலையில் இவர்கள் இருந்த சிறையிலிருந்து ஒரு கைதி தப்பித்து ஓடிவிட்டார். எனவே இருந்த கைதிகளல் பத்து நபர்களை "ஆசுவின்காசி" என்கிற இருட்டறை சிறை முகாமிற்கு அனுப்பினர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஒருவரான பிரான்சிஸ்செக் என்கிறவர், தனது மனைவியை நினைத்தும் தனது குழந்தைகளை நினைத்து பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினார். ஏனெனில், "இருட்டறை சிறைமுகாம்" என்பது கொடுமையான சிறை. அங்கு வெளிச்சம் இராது. உணவும் தண்ணீரும் கொடுக்கப்படாது. பட்டினிக்கிடந்து சாகவேண்டும். இதுவரை அந்த சிறைமுகாமிற்கு சென்றவர்களில் யாரும் உயிருடன் திரும்பியதில்லை. எனவே இந்த கைதி தன் முடிவை எண்ணியும் தனது மனைவி குழந்தைகளை நினைத்து அழுததில் வியப்பில்லை. இந்நிலையில் அந்த சிறையில் இருந்த "கோல்பே" அவர்களை அந்நகருக்குப் பதிலாக அந்த கொடுமையான மரண சிறைக்கு அனுப்பி வைத்தனர். இவரது இந்தச் செயல், மனிதர்களின் பாவங்களுக்காக தன்னை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த இயேசு ஆண்டவரின் செயலை நினைவுப்படுத்துகிறதாக இருக்கிறது.

தனது 12 வயதில் அன்னை மரிக்கு வாக்களித்த தூய்மையையும் தியாகத்தையும் தனது வாழ்வில் முழுமையாக வாழ்ந்துக் காட்டிய திருப்தியில் தந்தை "கோல்பே" அவர்கள் மலர்ந்த முகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருட்டறை கொடுமை சிறைக்குச் சென்றார். அந்த இருட்டறை சிறையில் அவருடன் இருந்தவர்களில் ஏழு நபர்கள் பசியினாலும் தாகத்தினாலும் இறந்துபோயினர். ஆனால் தந்தை கோல்பே அவர்களும் மற்ற இரண்டு நபர்களும் எலும்பும் தோலுமாய் உருக்குலைந்து உயிருடன் இருந்தனர். இவர்கள் இருந்த அந்த இருட்டறையை நாஜிக்கள் தாங்கள் தங்கும் பதுங்கு குழிகளாய் பயன்படுத்தியும் வந்தனர். தற்போது அவர்கள் அந்தப்பகுதியை விட்டு வெளியேற வேண்டியிருந்ததால் தந்தை கோல்பே அவர்களையும் மற்றவர்களையும் கடுமையான விஷ ஊசி செலுத்தி கொன்றனர். 1941ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் தந்தை "கோல்பே" அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

இவரது மரணம் போலந்து மக்களுக்கு ஒரு உத்வேகம் கொடுத்தது. தங்களது சுதந்திரப் போராட்டத்திற்கு விதையாகப் பார்க்கப்பட்டது. இவரது தியாக வாழ்வு போலந்து மக்களின் கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊக்கம் கொடுக்கும் வாழ்வாக இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தும் நிகழ்வாகவும் அமைந்தது. இருட்டறை சிறைக்கு அனுப்பபடவிருந்த தந்தை கோல்பே அவர்களால் இறுதிநேரத்தில் அதிலிருந்து காப்பாற்றப்பட்ட "பிரான்சிஸ்" அவர்கள் ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப் பிறகு அதாவது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் சிறையில் பட்ட துன்பங்களையும் அந்நேரத்தில் தந்தை "கோல்பே" அவர்கள் தங்களுக்கு எவ்வாறெல்லாம் இறைசெய்தியளித்து இறைமகன் இயேசுவின்மீது நம்பிக்கையூட்டினார் மக்களுக்கு தெரியப்படுத்தினார். அதுமட்டுமல்ல கொடுமையான

இருட்டறை சிறையிலிருந்து தந்தை "கோல்பே" அவர்கள் எவ்வாறு தன்னைக் காப்பாற்றினார் என்பதையும், தந்தை அவர்கள் எவ்வாறு இறந்தார் என்பதையும் மக்களுக்கு வெளிப்படுத்தினார்.

தந்தை "மாக்சிமிலியன் கோல்பே" அவர்களை தந்தை புனித இரண்டாம் ஜான்பால் அவர் புனிதராக திருநிலைப்படுத்தி தந்தை அவர்கள் புனித தியாக வாழ்வை உலகறியச் செய்தார். அந்த விழா புனிதரால் காப்பாற்றப்பட்ட திரு. பிரான்சிஸ்செக் அவர்கள் சிறப்பு விருந்தினராக திருத்தந்தை அவர்களால் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பிறரன்பின் இரத்த சாட்சியாக (Martyr of Charity) மரித்த தந்தை கோல்பே அவர்களின் திருவிழாவை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 14ம் நாள் திருஅவை சிறப்பிக்கிறது. தந்தை கோல்பே அவர்களின் புனித வாழ்வும் தியாக வாழ்வும் நம்மை ஈர்க்கட்டும். நாமும் நமது வாழ்வில் புனிதத்தையும் தியாகத்தையும் கடைப்பிடித்து வாழ்வதற்கு முயற்சி செய்வோம்.

## அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி மற்றும் அருளாளர் செப்ரீனா நமுங்க்குரா வாழ்வை அறிவோம்

திரு. ஜான் அலெக்ஸ்

### அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி

**இராஜ போக வாழ்வில் ஒருபோதும் ஈர்க்கப்படாதவர்** : அகஸ்துஸ் சர்தோரிஸ்கி, 1858ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் நாள் பாரிஸில் பிறந்தவர். இவரது குடும்பம் அரசப் பரம்பரையைச் சார்ந்தது. சுமார் 30 ஆண்டுகளாக போலந்தின் வம்ச நலன்களுடன் தொடர்புடைய அவரது உன்னத குடும்பம் பிரான்சுக்கு குடிபெயர்ந்தது. சிறு வயது முதலே அகஸ்துஸ் தன்னை ஒரு ஒழுக்கமுள்ள தெய்வ ஆற்றலில் நம்பிக்கை கொண்டவராக இருக்க எப்போதும் நினைத்தார். தனது போலந்து நாட்டுடன் நெருக்கமாகப் பிணைந்திருந்தாலும், அவர் அரச செல்வாக்கு சூழ்ந்த வாழ்க்கையில் ஒருபோதும் ஈர்க்கப்படவில்லை. அவரது ஆன்மாவில், இறையன்பும் பிறரன்பும் ஓங்கியது. உலகத்திற்குரிய பொருட்களிலிருந்து பற்றின்மை மற்றும் தீவிர ஆன்மீக வாழ்க்கைக்கான ஒரு தேடலை கொண்டு வந்தது. அந்த சூழ்நிலையில், இறைபராமரிப்பின் உதவியால், ஜோசப் கலினோவ்ஸ்கி என்ற ஆசிரியரை பெற்றார். அவர் தனது கல்வியில் மட்டுமல்ல, அவரது ஆன்மீக வாழ்விலும் கவனமாக வழிநடத்தினார்.

**தொன் போஸ்கோவுடன் சந்திப்பு** : தொன் போஸ்கோ, மே 1883ல் பிரான்சில் இருந்தார். ஆர்லியன்ஸ் இளவரசி மார்கரெட் அவர்களால் லம்போர்டு அரண்மனைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு அகஸ்துஸ் திருப்பலிக்கு உதவிசெய்தார். அப்போது தொன் போஸ்கோ, "வெகுநாட்களாக உங்களை சந்திக்க ஆவல் கொண்டிருந்தேன்" என்றதும் அகஸ்துஸ் திகைத்துப்போனார். இந்த சந்திப்புக்கு பிறகு தொன் போஸ்கோவை சந்திக்க பலமுறை தூரின் நகருக்கு சென்றார் அகஸ்துஸ்.

தன்னை சலேசிய சபையில் சேர்த்துக்கொள்வது பற்றி பலமுறை விவாதித்துள்ளார். ஆனால் அப்போதைய சூழலில், ஒரு இளவரசரை தனது சபையில் துறவியாக ஏற்றுகொள்ள தொன் போஸ்கோவிற்கு சரியாக தோன்றவில்லை. இருந்தபோதும் விடவில்லை அகஸ்துஸ். திருத்தந்தை 13ம் சிங்கராயரிடம் இதுபற்றி பேசினார். அதன்விளைவாக, ஜூலை 1887ல் தனது அரச வாழ்க்கை மற்றும் சொத்துக்களை, சிம்மாசனத்தை எல்லாம் துறந்தார். தன் குடும்பத்தின் எதிர்ப்புக்கு மத்தியில் சலேசிய சபையில் துறவியாக சேர்ந்தார். தொன் போஸ்கோ இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் குரு மாணவன் அகஸ்துஸின் துறவற அங்கியை ஆசீர்வதித்து வழங்கியது சிறப்புக்குரியது.

**ஒப்பற்ற தியாக வாழ்வு:** அகஸ்துஸ், 1892ல் சலேசிய சபை குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சலேசிய ஆன்மீகத்தை முழுமையாக வாழத்தொடங்கினார். தனது அரச வாழ்வு, சொத்துக்கள் என அனைத்தையும் துறந்து இளையோருக்காகவும், சபைக்காகவும் ஒப்பற்ற தியாகத்தை தனது வாழ்வில் செய்தவர். தொன் போஸ்கோவும் அதை வெளியில் காட்டாதபோதும், மிகவும் துன்பப்பட்டார். இத்தகைய ஒரு தன்னலமற்ற சலேசிய துறவி, 1893ல் இறந்தார். போலந்து நாட்டினரான முன்னாள் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல், தனது மண்ணின் மைந்தனை அகஸ்துஸ் அவர்களை திருஅவையில் 2004ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருளாளர் செப்ரீனா நமுங்க்குரா

**பம்பாஸ் மாகாணம் :** இலத்தீன் அமெரிக்க நாடுகளுள் ஒன்றான அர்ஜென்டினாவின் தென் மத்தியப் பகுதியில் உள்ளது பம்பாஸ் மாகாணம். கருப்பினத்தவரும் பூர்வ குடிகளும் வாழ்ந்த பல்வேறு லத்தீன் அமெரிக்கப் பகுதிகள் ஐரோப்பிய நாடுகளின் காலணியாக்கும் வெறியினால் அடிமைகளாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதாவது ஆங்கிலோ - இந்திய காலணிகள் போன்று அர்ஜென்டீனா-ஸ்பெயினின் காலணியாகிக் கொண்டிருந்தது. 1870களில் ஏறக்குறைய அர்ஜென்டினாவின் எல்லா குருநிலங்களும் நசுக்கப்பட்ட நிலையில் பம்பாஸின் தென் மத்திய பகுதியில் வாழ்ந்து வந்த அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்து மக்களுக்காக சண்டையிட்டு வாழ்வுரிமைக்காக போராடிய அந்த அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்த மனுவேல் நமுங்க்குரா - ரொசாரியா தம்பதியின் ஆறாவது மகனாக பிறந்தவரே செப்பரினோ நமுங்க்குரா.

**பழங்குடியில் புனிதத்தின் முன்னோடி :** மொராலெஸ் நமங்க்குரா என்று பெயரிடப்பட்டவர் பின்னாளில் "மொராலெஸ்" என்பதை செப்பரினோ என்று பெயர் மாற்றப்பட்டவர், ஒரு பழங்குடியினரின் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் பிற்காலத்தில் ஒரு புனிதத்தின் முன்னோடியாய் திகழ்வான் என்பதற்கு சான்றாய் அமைந்தது அவருடைய குழந்தைப் பருவம். தன்

மூதாதையர், தன் பின்புலம் பற்றி அறிந்திருந்த செப்பரீனோ தானும் ஒரு போர் வீரனாய் உருவெடுப்பதையே விருப்பினார். அதுமட்டுமல்ல தன் இனத்தவரின் எதிர்கால வித்தாக திகழப்போகிறவர் என்ற பெருமையை பெற்றவர்.

**கல்லெறிய குலுங்கியது கடல் :** செப்பரீனோ 1897ல், தனது தந்தையால் புவோன்ஸ் ஏர்ஸில் இராணுவப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். தொடக்கமுதலே அதை விரும்பாத செப்பரீனோவின் மனது வேறெதையோ நாடியவாறு காணப்பட்டது. இதை நன்கு புரிந்துகொண்ட செப்பரீனோவின் தந்தை மனுவேல், அவரை அதே பகுதியில் உள்ள சலேசிய பள்ளி ஒன்றில் சேர்த்தார். அன்பும், அரவணைப்பும், புரிதலும் முழுமையாய் இருந்த அந்த சலேசிய பள்ளி செப்பரீனோவுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியையும் அருளையும் வாரி வழங்கியது.

**பழங்குடி வாழ்வு - சலேசிய பாணி :** அடிப்படையில் இவர் பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, அருளடையாங்கள், நற்கருணை பக்தி, செப ஆர்வம் போன்றவற்றில் நாட்டம் உள்ளவராய் இருப்பதை சலேசிய பள்ளியில் இருந்த சலேசியர்கள் கண்டுகொண்டனர். வரிசையில் நிற்பது, சில கட்டுப்பாடுகளோடு வாழ்வது, சக மாணவர்களிடம் ஒத்து வாழ்வது... போன்றவை சுதந்திரமான பழங்குடி வாழ்க்கையில் வளர்ந்த செப்பரினோவுக்கு இவையெல்லாம் முதலில் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக தோன்றினாலும் காலப்போக்கில் இவற்றை ஏற்று பிற மாணவர்களுக்கு முன்மாதிரியாகப் பேசப்படும் அளவிற்கு தனது வாழ்வை வளர்த்துக்கொண்டார்.

**சலேசியப் பணியில் முளைத்த அழைப்பு :** மரியன்னையின் படம் ஒன்றும் தோமினிக் சாவியோவின் படம் ஒன்றும் எப்போதுமே தன் மேசையின்மீது வைத்திருப்பார். சலேசிய ஆயராக இருந்த பேரருட்திரு கலியேரோ அவர்களையும் தன் பகுதியில் பணிபுரிந்த சலேசிய குரு அருட்திரு. மிலனேசியோ அவர்களையும் பார்த்துத் தானும் சலேசிய குருவாக வேண்டும் என்று முடிவெடுத்தார். தன் பழங்குடி மக்களுக்கு இறைப்பணி செய்து நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றத் தணியாத்தாகம் அவரில் ஊற்றெடுத்தது. நான்கு வருடங்கள் படித்து முடித்தவர் உடல் நலம் குன்றியது. இதனால் தன் சொந்த பகுதியிலேயே தன் குருத்துவ கல்வியைத் தொடர அனுப்பி வைக்கப்பட்டார். மெல்ல இவரை தாக்கிக் கொண்டிருந்த காசநோயின் காரணமாக இத்தாலிக்கு அனுப்பப்பட்டார்.

**இன்னுமொரு தோமினிக் சாவியோ :** செப்பரீனோவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. பல அன்பு மாணவர்கள், அன்பு உள்ளங்கள் சூழ்ந்து நிற்க தன் ஆன்மாவை இறைப்பதம் கையளித்தார் செப்பரீனோ. சலேசிய பள்ளியில் நுழைந்த நாள் முதலே தோமினிக் சாவியோவின் வாழ்வை அறிந்து தெளிந்து அவரையே தன் வாழ்வின் முன்மாதிரியாய்க் கொண்டு வாழ்ந்தவர் செப்பரீனோ. இவரின் வாழ்க்கை

முறையை கண்டு பலரும் "புனித அலோசியஸ் ஞானப்பிரகாசியார் மீண்டும் உயிர்பெற்று வந்ததுபோன்று உள்ளது" என்றும் "இன்னுமொரு தோமினிக் சாவியோ" என்றும் பேசினார்கள். தோமினிக் சாவியோ 15 வயதுகூட நிரம்பாத சிறுவன். அவன் எப்படி இளையோர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கமுடியும் என்று தவறான காரணம் கற்பிக்கும் சிலருக்கு செப்பரீனோவின் வாழ்வு ஒரு சவால்... ஒரு சவுக்கடி... தோமினிக் சாவியோவை தன் முன் மாதிரியாய் கொண்டது மட்டுமல்ல, தானே ஒரு மாபெரும் முன்மாதிரியாய் வாழ்ந்து 19வயதிலும் இறைவனுக்கேற்ற வாழ்வு வாழ முடியும் என்று காட்டியுள்ள செப்பரீனோ நமுங்க்குராவிற்கு திருஅவை அருளாளர் நிலையை வழங்கியுள்ளது. கத்தோலிக்க இளையோர்களின் வாழ்வுக்கு ஒரு அரும்பெரும் இன்னுமொரு முன்மாதிரி கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### 1. கிறிஸ்துவின் அழகினால் நம்மை நிரப்ப வேண்டும்

பதினாறாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் உருவான சில துறவற சபைகளைச் சார்ந்த அருள்சகோதரிகளை அவர்களின் பொதுப்பேரவையை முன்னிட்டு ஜூலை 15 திங்கள் கிழமை வத்திக்கானில் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். துறவற வாழ்க்கையின் அழகு மற்றும் எளிமை என்னும் இரண்டு தலைப்புக்களில் தனது கருத்துக்களை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொதுநன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது என்ற திருத்தூதர் பவுலின் இறைவார்த்தைக்கேற்ப, கிறிஸ்துவின் அழகினால் உலகம் முழுவதும் மறைப்பணி ஒளிவீசட்டும் என்றும் கூறினார். துறவற ஆண்கள் மற்றும் பெண்களின் ஆன்மிகப் பயணத்தைத் திருஅவைத் தந்தையர்கள் தெய்வீக அழகின் அன்பு, தெய்வீக நன்மையின் கதிர்வீச்சு என்று வரையறுத்திருப்பது தற்செயலானது அல்ல என்றும், திருஅவையின் வாழும் மறைபொருளின் உருவமாக துறவிகள் இருக்கின்றார்கள் என்றும் கூறினார் திருத்தந்தை.

### 2. நைஜீரியாவுக்குப் புதிய திருப்பீடத்தூதரை நியமித்தார் திருத்தந்தை!

நைஜீரியாவின் திருப்பீடத் தூதராக அயர்லாந்தின் பேராயர் மைக்கேல் பிரான்சிஸ் குரோட்டி (ஆஉைாயநட குசயஉைளை ஊசழவவல) அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்துள்ளார் என்று செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. அண்டை நாடுகளான நைஜர் மற்றும் புர்கினா பாசோவின் முன்னாள் தூதராக, இப்பகுதியில் பணியாற்றிய விரிவான அனுபவம் பேராயர் குரோட்டி அவர்களுக்கு உள்ளது என்றும் அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நைஜீரியா, ஆப்பிரிக்காவில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு மற்றும் காங்கோ ஜனநாயகக்

குடியரசிற்குப் பிறகு அதன் இரண்டாவது பெரிய கத்தோலிக்க மக்கள் தொகையைக் கொண்டுள்ளது அதில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## 3. பெங்களூர் உயர் மறைமாவட்டத்திற்கு துணை ஆயர்கள் நியமனம்

இந்தியாவின் பெங்களூர் பெருநகர உயர் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய துணை ஆயர்களையும், வியட்நாமின் Ban Mê Thuôt மறைமாவட்டத்திற்கு புதிய ஆயரையும் நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். பெங்களூர் உயர்மறைமாவட்ட அதிபர் அருள்பணி. ஆரோக்கிய ராஜ் சதீஸ் குமார் அவர்களையும் திருஇருதய பங்குத்தளத்தின் பங்குத்தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அருள்பணி ஜோசப் சூசைநாதன் அவர்களையும் துணை ஆயராக நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மேலும் வியட்நாமின் Ban Mê Thuôt மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருள்பணி John Baptist Nguyen Huy Bac அவர்களையும் நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 4. திருத்தந்தையின் கிழக்கு திமோர் திருப்பயணம்!

கிழக்கு திமோர் மற்றும் இந்தோனேசிய அரசின் எல்லையில் உள்ள மறைமாவட்டங்கள் வரும் செப்டம்பர் மாதத்தில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக வாழும் ஆசிய நாட்டிற்கு வருகைதரும் திருத்தந்தையின் திருப்பயணத்தில் கத்தோலிக்கர்களுக்கு உதவ முன்வந்துள்ளதாக யூகான் செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. இந்தோனேசியாவின் குபாங் உயர்மறைமாவட்டம் மற்றும் மேற்கு திமோரில் உள்ள அடம்புவா மறைமாவட்டம், கிழக்கு திமோருடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது என்றும், திருத்தந்தையின் கிழக்கு திமோர் திருப்பயணத்தில் கலந்து கொள்ள விரும்பும் அருள்பணியாளர்கள், அருள்கன்னியர்கள், மற்றும் பொதுநிலை விசுவாசிகள் தங்களிடம் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு விண்ணப்பித்துள்ளதாகவும் அச்செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. வரும் செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை கிழக்கு திமோருக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பயணம் மேற்கொள்கிறார்.

## 5. திருத்தந்தையின் கிழக்கு திமோர் திருப்பயணம்!

கிழக்கு திமோர் மற்றும் இந்தோனேசிய அரசின் எல்லையில் உள்ள மறைமாவட்டங்கள் வரும் செப்டம்பர் மாதத்தில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாகவாழும்ஆசியநாட்டிற்குவருகைதரும்திருத்தந்தையின் திருப்பயணத்தில் கத்தோலிக்கர்களுக்கு உதவ முன்வந்துள்ளதாக யூகான் செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. இந்தோனேசியாவின் குபாங் உயர்மறைமாவட்டம் மற்றும் மேற்கு திமோரில் உள்ள அடம்புவா மறைமாவட்டம், கிழக்கு திமோருடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது என்றும், திருத்தந்தையின் கிழக்கு திமோர் திருப்பயணத்தில் கலந்து

கொள்ள விரும்பும் அருள்பணியாளர்கள், அருள்கன்னியர்கள், மற்றும் பொதுநிலை விசுவாசிகள் தங்களிடம் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு விண்ணப்பித்துள்ளதாகவும் அச்செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. வரும் செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை கிழக்கு திமோருக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பயணம் மேற்கொள்கிறார்.

## சுடர் வாசகர் போட்டி - 112 சரியான விடைகள்

1. அருளாளர் Luigj Paliq மற்றும் அருளாளர் Gjon Gazulli
2. அருளாளர் மரிய ரொமேரோ
3. லயோலா இஞ்ஞாசியார்
4. கான்ஸ்டான்டின் நோபிள்
5. புனித ஷார்பல் மாக்லுப்
6. உத்திரியமாக
7. பதுவாவில், 22வது வயதில்
8. யோவான் 20: 28
9. அரு. மரிய ரொமேரோ ஏழை மக்களுக்கு கட்டித்தந்த வீடுகள்
10. புனித தோமாவால் செய்யப்பட்டது
11. இயேசுவே மீட்பர், கடவுளின் மகன், உலகிற்கு வரவிருக்கும் மெசியா
12. புனித யாக்கோபு
13. தந்தை ஆண்டன் ஜாரவு மாக்லுப், தாய் பிரிஜ்ஜிட் ஷார்பல் மாக்லுப்
14. அழகிய பூந்தோட்டம்
15. புனித தோமையார்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Flora Mary Josephine, Tirupur

Sr. Jecintha, Chennai

Mr. George Stephen, Villupuram

## சுடர் வாசகர் போட்டி - 113

1. நைஜீரியாவின் திருப்பீட தூதராக திருத்தந்தை யாரை நியமித்துள்ளார்?
2. அரு. செப்ரீனோ நமுங்க்குரா எந்த வயதில் இறைவனடி சேர்ந்தார்?
3. "மரியா உன்னத ஆசியால் நிரப்பப்பெற்று அரசியாக நிற்கிறாள்" கூறியது யார்?
4. நமது நாடு எத்தனையாவது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றது?
5. மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழாவை கொண்டாட அனுமதி அளித்தது யார்?
6. "கார்போலிக்" அமிலத்தை உடலில் செலுத்தி சாகடிக்கப்பட்ட புனிதர் யார்?
7. மனவலிமை பெற எது அவசியம் என ஆசிரியர் கூறுகிறார்?
8. உரோமையில் உள்ள ஐந்து பேராலயங்கள் யாவை?
9. திருஅவையின் வாழும் மறைபொருளின் உருவமாக ---இருக்கிறார்கள்?
10. ஜோசப் கலினோவ்ஸ்கி யாருடைய ஆசிரியர்?
11. புனித அகுஸ்தினார் எந்த வயதில் "மக்கேனியம்" தப்பறை தவறு என்று உணர்ந்தார்?
12. "டார்மிஷன்" என்பதன் பொருள் என்ன?
13. புனித மாக்ஸி மில்லியனின் கனவில் தோன்றி மரியன்னை கொண்டு வந்த கிரீடத்தின் பொருள் என்ன?
14. இயேசுவின் தோற்ற மாற்றத்தின்போது உடனிருந்த சீடர்கள் யார் யார்?
15. மரியாளின் பக்தர் யோவானுக்கு கனவில் தோன்றி மரியா எந்த இடத்தில் ஆலயம் கட்டச்சொன்னார்?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................
................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 22ம் ஞாயிறு
பெரிய கிரகோரி
கொல்கொத்தா நகர் புனித தெரேசா
பொதுக்காலம் 23ம் ஞாயிறு (கன்னி மரியாவின் பிறந்த நாள் பெருவிழா)
மரியாவின் தூய்மைமிகு பெயர் விழா
சிலுவையின் மாட்சி
பொதுக்காலம் 24ம் ஞாயிறு
புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர்
புனித மத்தியா திருத்தூதர் விழா
பொதுக்காலம் 25ம் ஞாயிறு மற்றும் அரு.ஜோசப் கலசான்ஸ் மார்க்ஸ்
புனித பியோ அருள்பணியாளர்
புனித விசென்ட் தெ பால்
பொதுக்காலம் 26ம் ஞாயிறு
புனித ஜெரோம் அருள்பணியாளர்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

கொல்கொத்தா புனித தெரேசா வாழ்வு தரும் பாடம்
தந்தை பியோவின் புனித வாழ்வை அறிவோம்
அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மார்க்ஸ் அருளாளரான வரலாறு
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஆகஸ்டு 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஆகஸ்டு மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | புனித அல்போன்ஸ் மரிய லிகோரி | எரே. 18: 1-6 | மத். 13: 47-53 |
| 2 | வெ | வெர்செல்லி நகர்ப் புனித யுசேபியுஸ் | எரே. 26: 1-9 | மத். 13: 54-58 |
| 3 | ச | | எரே. 26: 11-16, 24 | மத். 14: 1-14 |
| 4 | **ஞா** | **பொதுக்காலம் 18ம் ஞாயிறு** | **I.** வி.ப. 16: 2-4,12-15<br>**II.** 2கொரி. 4: 17-20-24 | யோவா. 6: 24-35 |
| 5 | தி | | எரே. 28: 1-17 | மத். 14: 13-21 |
| 6 | செ | **ஆண்டவரின் தோற்ற மாற்றம் விழா** | **I.** தானி. 2: 2-5<br>**II.** 2பேதுரு 1: 16-19 | மாற்கு 9: 2-9 |
| 7 | பு | புனித கயத்தான் | எரே. 31: 1-7 | மத். 15: 21-28 |
| 8 | வி | புனித தோமினிக் | எரே. 31: 31-34 | மத். 16: 13-23 |
| 9 | வெ | சிலுவையின் புனித தெரசா பெனடிக்டா | நாகூம் 1: 15-2: 2, 3: 1-3,6-7 | மத். 16: 24-28 |
| 10 | ச | புனித லாரன்ஸ் திருத்தொண்டர் விழா | 2கொரி. 9: 6-10 | யோவா. 12: 24-26 |
| 11 | **ஞா** | **பொதுக்காலம் 19ம் ஞாயிறு** | **I.** 1அர. 19:4-8<br>**II.** எபே. 4: 30-5:2 | யோவா. 6: 41-51 |
| 12 | தி | புனித ஜேன் பிரான்செஸ் தே ஷாந்தால் | எசே. 1: 2-5,24-28 | மத். 17: 22-27 |
| 13 | செ | புனிதர்கள் போன்சியான், இப்போலித்துஸ் | எசே. 2:8-3:4 | லூக். 1: 39-56 |
| 14 | பு | புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே | எசே. 9: 1-7,10: 18-22 | மத். 18: 15-20 |
| 15 | வி | **புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா** | **I.** திவெ. 11: 19,12: 1-6,10<br>**II.** 1கொரி. 15: 20-26 | லூக். 1: 39-56 |
| 16 | வெ | ஹங்கேரி நாட்டுப் புனித ஸ்டீபன் | எசே. 16: 1-15,60,63 | மத். 19: 3-12 |
| 17 | ச | | எசே. 18: 1-10,13, 30-32 | மத். 19: 13-15 |
| 18 | **ஞா** | **பொதுக்காலம் 20ம் ஞாயிறு** | **I.** நீமொ. 9: 2-6<br>**II.** எபே. 5: 15-20 | யோவா. 6: 51-58 |
| 19 | தி | புனித ஜான் யூட்ஸ் | எசே. 24: 15-24 | மத். 19: 16-22 |
| 20 | செ | புனித பெர்னார்டு | எசே. 28: 1-10 | மத். 19: 23-30 |
| 21 | பு | புனித பத்தாம் பயஸ் | எசே. 34: 1-11 | மத். 20: 1-16 |
| 22 | வி | அரசியான புனித கன்னி மரியா நினைவு | எசா. 9: 2-4, 6-7 | லூக். 1: 26-38 |
| 23 | வெ | | எசா. 37: 1-14 | மத். 22: 34-40 |
| 24 | ச | புனித பர்த்தலமேயு விழா | திவெ. 21: 9-14 | யோவா. 1: 45-51 |
| 25 | **ஞா** | **பொதுக்காலம் 21ம் ஞாயிறு** | **I.** யோசு. 24: 1-2, 15-17,18<br>**II.** எபே. 5: 21-32 | யோவா. 6: 60-69 |
| 26 | தி | | 2தெச. 1: 1-5, 11-12 | மத். 23: 13-22 |
| 27 | செ | புனித மோனிக்கா | 2தெச. 2: 1-3, 14-17 | மத். 23: 23-26 |
| 28 | பு | புனித அகுஸ்தின் | 2தெச. 3: 6-10, 16-18 | மத். 23: 27-32 |
| 29 | வி | புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் நினைவு | எரே. 1: 17-19 | மாற்கு 6: 17-29 |
| 30 | வெ | புனித யூப்ராசியா | 2கொரி. 1: 17-25 | மத். 25: 1-13 |
| 31 | ச | | 1கொரி. 1: 26-31 | மத். 25: 14-30 |



நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள்
எத்துணை அழகாய் இருக்கின்றன. உரோ.10:15
DEEPAGAM
இல்லம் தேடி இறையரசு
இல்லங்களுக்கு நற்செய்தி அறிவித்தல்
குடும்பங்களை கிறிஸ்துவுக்குள் கட்டியெழுப்புதல்
இந்த நற்செய்தி அறிவிக்கும் பணிக்கு
தன்னார்வத்தோடு வரும் பொதுநிலையினர்களுக்கு
உங்களால் முடிந்த செப உதவியும், பொருளுதவியும்
செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்
www.upiqrcode.com
தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
45, லேண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை : 10. செல்: 9385201453

TO SHARE THE LIGHT

## இனியவர்களே....

நமது பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி, இளையோர் மற்றும் அனைவரும் இருக்கின்ற இடத்திலிருந்து நற்பணிகள் செய்து இயேசுவின் அன்புப் பணியில் இணைய

## இயேசுவின் நண்பன் குழு

உங்களை வரவேற்கிறது!

இயேசுவின் நண்பர்

LOVE GOD LOVE OTHERS

FREINDS of JESUS

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள

## தீபகம்

+91 9385201453

அன்பு நண்பர்களே, **தீபகம்** மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

0138053000007612@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

www.upiqrcode.com

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 **Deepagam Don Bosco**

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10